# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

| சிலம்பு | திருவள்ளுவர் ஆண்டு உ௦௦௪, சித்திரை | பரல் |
|---|---|---|
| ௪௭ | மே 1973 | ௬ |


## திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

(முன் பரல் ௮ பக்கம் ௬௫௨ ஆம் தொடர்ச்சி)

**திருவள்ளுவரும் சிவப்பிரகாசரும்**

இதனை 1956 இல் கழகம் அச்சிட்டு வெளியிட்டது. இதனை எழுதியவர் மதுரை மாவட்டம் மேலூர் மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான் திரு வீ. குமாரசாமி ஐயர் அவர்களாவர். அவர் ஓய்வு பெற்றபின் மயிலம் செந்தமிழ்க் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார். வீர சைவ மரபினராதலால் வீர சைவ அருட் பேராளர் சிவப்பிரகாச அடிகளார் அருளிய நூல்களையெல்லாம் ஐயந்திரிபற ஆழ்ந்துகற் றுய்ந்த புலவராயினர். அவற்றுள் 'பிரபுலிங்கலீலை', 'திருவெங்கைக்கோவை' ஆகிய இருநூல் களிலும் எடுத்தாளப்பெற்றுள்ள திருக்குறள் வெண்பாக்களை விளக்கிக் காட்ட அவ்வரலாறுகளையும் கோவைத்துறைப் பொருள்களையும் தொடர்புறப் பொருத்தி வரைந்துள்ளனர். மேலும் இவ் விரண்டல்லாமல் அடிகளின் பிற நூல்களில் குறட் பாக்கள் ஆட்சி பெற்றுள்ள இடங்களையும் கற்பார்க்குச் சுவை பயக்கும் வகையில் தெளிவுற விளக்கியுள்ளார். சிவப்பிரகாச அடிகளின் கற்பனைத் திறத்தைத் தெய்வப் புலமைத் திருவள்ளு வரின் குறட்பாக்களைக் கொண்டு விளக்கிய முறை பெரிதும் போற்றுதற்குரியதாய் இதன்கண் அமைந்துள்ளது.

திருக்குறளை எடுத்தாளாத புலவர் இலரெனினும் மிகுதியாய் எடுத்தாண்டு தம் நூல்கட்கு விழுப்பந் தேடிய புலவர்

சிலருள் சிவப்பிரகாச அடிகளார் கம்பருக்கு அடுத்த நிலையிற் குறிப்பிடத்தக்க ஒருவர் ஆவர். இந் நூலைப்போல் 'திருவள்ளுவரும் கம்பரும்', 'திருவள்ளுவரும் கச்சியப்ப முனிவரும்' என்னும் நூல்கள் வெளியிடப் பெறின் அவை இலக்கிய வுலகுக்கு நல்விருந்தா யமைவனவாகும்.

இந் நூலாசிரியர் எழுதிய 'பிரபுலிங்கலீலை ஆராய்ச்சி' கழக வழி வெளியிடப் பெற்றுள்ளது. 1955 இல் இவர் கழகத்தின் ஐங்குறுநூறு மாநாட்டிலே 'முல்லை'த் திணைபற்றிச் சொற்பொழிவுக் கட்டுரையினை முன்னதாக எழுதிக் கொடுத்து மதிப்புக்குரிய பண்டித ஆ. கார்மேகக் கோனார் அவர்கள் தலைமையில் பேசி மகிழ்வூட்டிய செந்தமிழ்ப் புலவராவர்.

இவர் தணிகைப் புராண உரை வெளிவருதற்குக் காரணராயிருந்தமையால் கழக நூற்பதிப்பு வரலாற்றில் சிறப்பிடம் பெறுதற்குரியவர் என்பதை ஈண்டு விளக்குவது ஏற்புடைத்தாகும்.

1954 இல் கழகப் பணிக்கென உந்துவண்டி (மோட்டார்) வாங்கப் பெற்றது. அதன்பின் சென்னையிலிருந்து திருநெல்வேலியிலுள்ள பதிவு செய்யப்பெற்ற கழக நிலையத்துக்கு உந்து வண்டியில் யான் செல்லுவதுண்டு. செல்லும் வழியில் மேலூரில் புலவர் திரு வீ. குமாரசாமி ஐயர் அவர்களை வீட்டிலோ பள்ளியிலோ கண்டு அளவளாவுவேன். அவர்கள் பாடங் கேட்ட ஆசிரியர்களைப் பற்றி உசாவியபோது தமிழ்ப் பெரும் புலவர் ஆர். கந்தசாமியார் தம் ஆசிரியர்களுள் ஒருவர் என்றனர். உடனே யான் "அவர் தணிகைப் புராணத்துக்கு உரை எழுதி வைத்திருந்தனரே. அவ்வுரையினைப் பெறும் பொருட்டுக் கழக அமைச்சரும் என் அருமைத் தமையனாருமான திருவரங்கனார் தாம் காலமாவதற்கு முன்னைய 1943 ஆம் ஆண்டு கூமாப்பட்டியிலுள்ள பெரும் புலவர் கந்தசாமியாருக்கு உறவினர்களைக் கண்டு கேட்டதில் அவ்வுரையின் கையெழுத்துப்படி அங்கிருக்கிறது இங்கிருக்கிறது என்று கூறி அலைக்கழிக்கப் பெறவே சோர்வுற்று மிக்க வருத்தத்தோடு திரும்பி விட்டனர். அஃது இப்போது கிடைக்கப் பெறுமா" என்று உசாவினேன்.

புலவர் ஐயரவர்கள் 'தம் ஆசிரியர் தமக்குத் தணிகைப் புராணம் பாடங் கற்பித்ததாகவும் அதற்கு உரை எழுதும்போது உடனிருந்து துணை புரிந்ததாகவும், தம் பள்ளித் தலைமை யாசிரியர் திரு சதாசிவத் தேவரவர்கள் அவருக்கு நெருங்கிய

உறவினர் என்றும், அவர்கள்வழி அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறித் தம் தலைமையாசிரியரிடம் என்னை அழைத்துச் சென்றனர். தணிகைப் புராண உரை கையெழுத்துப்படி திரு கந்தசாமியாரின் உடன் பிறந்தார் வீட்டிலே உள்ளது என்றும், அதற்குக் கைம்மாறு வழங்கின் பெற்றுத் தருவதாகவுங் கூறவே யான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

கையெழுத்துப் படியிலிருந்து பத்துச் செய்யுள்கட்கு மட்டும் உரையினைப் படி எடுத்து அனுப்புமாறும் நூல் முழுமைக்கும் உரை எழுதப் பெற்றிருக்கிறதா என்பதை அறிந்து எழுதுமாறும் வேண்டினேன். அவர் அங்ஙனமே பத்துச் செய்யுள்கட்குரிய உரையினைப் படி எடுத்து அனுப்பியதோடு மொத்தச் செய்யுள்கள் 3161 இல் 1976 க்கு மட்டுமே உரையுள்ளதென்று தெரிவித்தனர். அதற்குக் கைம்மாருக ரூபா ஆயிரம் மட்டும் தருவதாக எழுதி இசைவினைப் பெற்றேன். திருப்பரங்குன்றத்திலே கழக மேலாளர் திரு தீ. வள்ளிநாயகம் பிள்ளை திரு சதாசிவத் தேவரவர்களிடம் காசோலை கொடுத்துத் தணிகைப் புராண உரை கையெழுத்துப் படியினைப் பெற்ற அதே நேரத்தில் யான் காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையத்திலுள்ள கச்சியப்ப முனிவர் கற்கோயிலு (சமாதி) க்கு வழிபாடு செய்யும் வாய்ப்புக் கிடைத்தமை தணிகைப் பெருமான் திருவருளாலேதான் என எண்ணி எண்ணி இறும்பூதெய்தினேன்.

பின்னர்த் தணிகைப் புராணத்தில் உரை எழுதப் பெருத 1185 செய்யுள்கட்குச் 'சமுத்திர விலாசம்', 'சந்திர விலாசம்' என்னும் அருந்தமிழ் நூல்கட்கு உரை எழுதிப் பாராட்டுப்பெற்ற கழகப் புலவர் செ. ரெ. இராமசாமி பிள்ளை உரை எழுதத் தொடங்கினர். அவர் 114 செய்யுள்களுக்கு உரை எழுதி முடித்தநிலையில் பக்கவாத நோயினல் பீடிக்கப் பெற்றுத் தொடர்ந்து எழுத முடியாதவராயினர். அதன்பின் பெருமழைப் புலவர் திரு பொ. வே. சோமசுந்தரனர் எஞ்சிய 1071 செய்யுளுக்கும் உரை எழுதியதோடு ஆராய்ச்சி முன்னுரை, நூலாசிரியர் வரலாறு, உரை வரலாறு ஆகியவற்றையும் எழுதி நூலை அச்சிட்டு முடிப்பதற்கு ஒல்லும் வகையில் உதவி புரிந்தனர். தணிகைப் புராண உரை அச்சிடப் பெற்றதன் முழு வரலாற்றையும் அந்நூலின்கண் காணப்பெறும் 'உரை வரலாறு' என்னும் பகுதியால் அறிந்து மகிழ்க.

புலவர்களுக்குள் ஒருவர்க் கொருவர் இவரால் தணிகைப் புராணத்துக்கு உரை கூற முடியுமா என்று தமிழ்ப் புலமையை

அளந்து பார்ப்பதுண்டு. அத்தகையதோர் அரிய நூலை உரையோடு வெளியிடவும், கழக அமைச்சர் திருவரங்கனுர் முயன்று கிடைக்கப்பெருததொரு நூலை அரிதின் முயன்றுபெற்று வெளியிடவும், உரையில்லாத செய்யுள்கட்குத் தக்க புலவர் களைக்கொண்டு உரை எழுதச் செய்து முடிப்பித்து வெளியிடவும் வாய்ப்பளித்தது தணிகை முருகன் தண்ணருளே யாகுமென மகிழ்வோம். அரைகுறையாக உரை எழுதப்பெற்ற கையெழுத்துப்படி கழகத்துக்குக் கிடைக்கப்பெருமல் போயிருப்பின் தணிகைப் புராண உரை அச்சிடப் பெருமலே போயிருக்குமென்பதும் பெரும்புலவர் கந்தசாமியார் பெயரும் துலங்காமலே மறைந்து போயிருக்கும் என்பதும் அறிதற்பாலது.

இதை யொட்டிப் பிறிதொரு சுவைதரு செய்தியும் ஈண்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

1923 இல் கழகம் அச்சிட்டு வெளியிட்ட தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனுவரையர் உரை நூலைப் பெரும்புலவர் கந்தசாமியார் அவர்கள் செப்பஞ் செய்ததோடு அடிக்குறிப்புகளும் எழுதித் தந்தனர். சில இடங்களில் தாம் எழுதி வைத்திருக்கும் தணிகைப் புராண உரையிற் காண்க எனக் குறிப்பிட்டிருந்தார்கள். அடிக்குறிப்பில், அச்சிடப் பெருத உரை நூலிற் காண்க என்று குறிப்பிடுவது நூற்பதிப்பு முறைக்குச் சிறிதும் பொருத்தமாகாதென்று தணிகைப் புராண உரை பற்றிய குறிப்புகளெல்லாம் நீக்கப் பெற்றன. அப்படி அவர்கள் எழுதிய குறிப்புகளை யெல்லாம் நீக்கி உரை நூலை அச்சிட்டு வெளிப்படுத்தியதனுல் அவர்கட்கு மிகுந்த சினமும் வெறுப்பும் என்மீதும் என் தமையனுர்மீதும் ஏற்படலாயிற்று. அவர்கட்கு அனுப்பப் பெற்ற ஆசிரியர் படிகளைக் கூடத் திருப்பி அனுப்பி விட்டனர்.

1932 இல் யான் சிதம்பரத்தில் சொல்லின் செல்வர் சேதுப் பிள்ளையவர்கள் இல்லத்திற்குச் சென்றிருந்தபோது பெரும் புலவர் கந்தசாமியார் அவர்கள் திரு பிள்ளையவர்களோடு வெளித் திண்ணையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். திரு புலவரவர்களை யான் அதுவரை நேரிற் கண்டதில்லை. அதனை உணர்ந்த திரு பிள்ளையவர்கள் என்னை இன்னுர் எனப் புலவரவர்கட்கு அறிமுகப் படுத்தினர். அங்ஙனம் அறிமுகப்படுத்தவே சிவத் திரு புலவரவர்கள் முன்பு கொண்டிருந்த சினத்தையும் வெறுப்பையும் அங்கே காட்டலானுர்கள். யான் சிரித்துக் கொண்டே உயர்திரு புலவரவர்கட்குப் பிறவியொழித்து வீடு பேற்றை யருளத் திருவருள் நினைப்பினும் எங்களைத் திட்டும்

பொருட்டுப் பிறவி வேண்டுமென்பர் போலும் எனக் கூறி விட்டு அவ்விடத்தினின்றும் அகன்று சென்றுவிட்டேன். 'புலமை வேறு பதிப்புத்துறை வேறு' என்பதை உணர்த்தும் பொருட்டே யன்றிப் பெரும் புலவரவர்களைக் குறைகூறும் பொருட்டு இதனை இங்கே தெரிவித்தேன் அல்லேன்.

பெரும்புலவர் கந்தசாமியார் எழுதிய தணிகைப் புராண உரையினை அச்சிட்டு வெளிக் கொணர வேண்டுமென்று என் தமையனாரும் யானும் மேற்கொண்ட முயற்சி வெற்றியுறுமாறு செய்து புலவரவர்களின் புகழை நிலைநிறுத்திய தணிகை முருகன் தண்ணருளை யெண்ணிப் போற்றுவோமாக.

தணிகைப் புராண உரையினைப் பெற வழிகாட்டிய வித்துவான் திரு வீ. குமாரசாமி ஐயரும், உரை எழுதப் பெருமலிருந்த செய்யுள்கட்கு உரை எழுதி முடிப்பித்த பெருமழைப் புலவரும் சிவத்திரு கந்தசாமியாரிடம் அண்ணு மலைப் பல்கலைக் கழகத்தில் தணிகைப் புராணத்தைப் பாடங் கேட்டவர்களாக அமைந்தமை திருவருட் குறிப்பேயாகும்.

**திருவள்ளுவர் கதை (வில்லுப் பாட்டு)**

இதனை இயற்றியவர் நெல்லை ம. தி. தா. இந்துக் கல்லூரி உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் திரு அ. க. நவநீத கிருட்டிணன் ஆவர். செந்தமிழ் நடையில் இன்னேசை பொருந்த நூல்கள் எழுதுந் திறலினர்; சிறந்த பேச்சாளர்; விரைந்து பல பாவினங்களில் செய்யுளியற்றும் சிறந்த கவிஞர்; செய்யுள் நூல்கட்கு உரை விளக்கம் எழுதுந் திறமையாளர், எவரிடமும் அன்போடு பழகுந்தன்மையர்; அடுத்தவர்க்கு உதவி செய்யும் சால்பினர்; கனிந்த முகமும் இனித்த சொல்லு முடைய பண்பினர்; ஏழை எளிய மாணவர்க்கு உடையும் நூல்களும் வாங்கிக் கொடுத்துதவிய அறவாணர்.

திருநெல்வேலிச் சந்திப்பிலுள்ள தருமபுரத் திருமடத்தில் என் கெழுதகை நண்பர் திரு இராம கனகசபாபதி பிள்ளையவர் களால் அருணகிரி இசைக் கழகம் தோற்றுவிக்கப் பெற்றது. அக் கழகத்தின் விழா அமைப்பாளராகவும், திருக்குறள், பெரிய புராணம் முதலிய அறிவு நூல் அன்பு நூல்களை முறையாகப் பாடம் நடத்துபவராகவும் தொண்டு செய்து வந்தார் வித்துவான் திரு அ. க. நவநீதகிருட்டிணன். பெருமக்கள் இல்லச் சடங்குகட்கு அழைப்பிதழ், வாழ்த்துப்பா, வாழ்த்துரை ஆகியவற்றைக் கைம்மாறு கருதாது எழுதி வழங்குவார்.

ஏனையோர் நடத்தும் தமிழ் விழா, சமய விழாக்களின் பொறுப்பினை ஏற்றுச் சிறப்பாக நடத்துவர். நெல்லை மாவட்டத் திருக்கோயில் விழாக்களிலும் கைத்தறி வார விழாக்களிலும் இவருடைய சொற்பொழிவுகள் தவறுமல் நிகழும். இவர்தம் சொற்பொழிவு பொருட் பொலிவுடையதாய், ஓசைநய முடைய தாய், அடுக்குத் தொடர் நிரம்பியதாய்க், கேட்டார்ப் பிணிக்குந் தகையதாய் மிளிரும்.

நெல்லை அருணகிரி இசைக் கழகத்தில் ஆண்டுதோறும் நடைபெறுந் தமிழ் விழாக்களில் ஒருநாள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில் இலக்கியச் சொற்பொழிவு விழா நடப்பதற்கு நல்லுள்ளத்தோடு ஏற்பாடு செய்வர். அந்த முறையில் பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு, பரிபாடல் ஆகிய சங்க இலக்கியங்கட்கு மூன்று மாநாடுகளும், சிற்றிலக்கியங்கட்கு ஐந்து மாநாடுகளும், தமிழக வரலாறு, அரசியலறிவு ஆகியவற்றிற்கு இரண்டு மாநாடுகளும் நடை பெற்றன. ஒவ்வொரு மாநாட்டுக்கும் என்னைக் கலந்து சொற்பொழிவுத் தலைப்புக்களை அமைப்பதோடு தலைவரையும், சொற்பொழிவாளர்களையுந் தேர்ந்தெடுப்பர். தலைமையுரை யினையும் சொற்பொழிவுகளையும் மாநாட்டுக்கு முன்னதாகவே காலங் குறிப்பிட்டு அந்தக் காலத்துக்குள் எழுதி வாங்கி அச்சிடுவதற்கு அனுப்பி வைப்பர். சொற்பொழிவு நூல் மாநாட்டிலே வெளியிடப்பெறும். யான் சொற்பொழிவு நூலை அச்சிட்டு முடித்துக் கொண்டு மாநாட்டுக்குப் பார்வை யாளர்போல் போய்வருவேன். இங்ஙனம் பல சொற்பொழிவு மாநாடுகளை மிகவுஞ் சிறப்புற நடத்தி அவர் கழகத்துக்கு ஈட்டித் தந்த புகழுக்குக் கழகத்தாரும், தமிழக மக்களும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையவராவர். இடையிடையே கழகச் சார்பில் பெரும் புலவர்களை வரவழைத்துச் சிறப்புச் சொற் பொழிவுகட்கும் ஏற்பாடு செய்த சீரிய பண்பாளருமாவர்.

1952 மேத் திங்களில் நெல்லை அருணகிரி இசைக் கழகத்தில் 21 நாள்கள் தொடர்பாகவே சாத்தூர் வழக் குரைஞரும் மூதறிஞருமான சிவத்திரு தூ. சு. கந்தசாமி முதலியார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு சிவஞான போத வகுப்பு நடைபெற்றது. பேரூர் இராமசாமி அடிகளார், சிரவண புரம் சுந்தர சுவாமிகள் ஆகியோர் உள்பட ஆசிரியர்களும் மாணவர்களுமாக நாற்பதின்மர் முறையாகப் பாடங் கேட்டனர். காலையில் வகுப்பும், மாலையில் கேள்வி கேட்டுத் தெளிவு பெறலும், இரவு சொற்பொழிவு, உரையாடல், நாடகம் முதலியனவும் நடைபெற்றன. உரையாடல், நாடகம் முதலிய

வற்றை எளிய இனிய நடையில் ஆக்கித் தந்ததோடு வகுப்பும் பிறவும் சிறப்புற நடைபெறச் செய்த பெருமைக்குரியவர் திரு அ. க. ந. எனின் அது மிகையாகாது.

மேற்படி அருணகிரி இசைக் கழக விழாவிலே வித்துவான் திரு அ. க. ந. அவர்கள் 'தமிழ் வளர்ந்த கதை'யினை வில்லிசையில் அமைத்துப் பாடுமாறு செய்தனர். வில்லிசை பாண்டி நாட்டுக்கே அதிலும் திருநெல்வேலி மாவட்டத்துக்கே சிறப்பாக உரியது. அம்மாவட்டத்திலுள்ள சிறு தெய்வக் கோயில் விழாக்களிலே பெரும்பாலும் வில்லிசை நடைபெறும். வில்லிசையில் பெயர் போனவர் திரு ஐயம்பிள்ளை ஆவர். 1952இல் தமிழ் வளர்ந்த கதையும் அதனையடுத்துத் திருவள்ளுவர் கதையும், கண்ணகி கதையும், ஔவையார் கதையும் கழக வெளியீடுகளாக அச்சிடப் பெற்றன. இவை யாவும் வித்துவான் அ. க. ந. அவர்கள் எழுதுகோல் தீட்டிய வில்லிசை நூல்களாகும்.

திருவள்ளுவர் கதை அணிந்துரையில் ஆசிரியர் எழுதியது காண்க:

> *"வில்லிசையின் மறுமலர்ச்சிக்குக் காரணமான 'தமிழ் வளர்ந்த கதை' வில்லுப்பாட்டை விருப்புடன் வெளியிட்டருளிய கழகத்து ஆட்சியாளர் திருவாளர் வ. சுப்பையா பிள்ளையவர்கள் எனக்கு அவ்வில்லிசைத் துறையில் பேரூக்கமூட்டி, முன்பு குறுகிய நேரத்துக்கேற்றபடி ஆக்கிய 'திருவள்ளுவர் வரலாற்றை'யும் நீண்ட நேர நிகழ்ச்சிக்குப் பயன்படும் வகையில் பாட்டினை நீட்டிப் பெரிதாக்கித் தருமாறு கூறினார்கள். அவர்கள் தந்த ஊக்கத்தின் உறுபயனாகவே இத் திருவள்ளுவர் கதை—வில்லுப்பாட்டையும் ஆக்கினேன்."*

**வள்ளுவர் சொல்லமுதம் (4 புத்தகங்கள்)**

திருவள்ளுவர் கதைக்குப்பின் 'வள்ளுவர் சொல்லமுதம்' என்ற தலைப்பில் வித்துவான் அ. க. ந. அவர்கள் எழுதிய முதற் புத்தகம் 1955 இல் 805 ஆவது வெளியீடாகவும், 1956இல், 2 3ஆம் புத்தகங்கள் 835, 840ஆம் வெளியீடுகளாகவும், 1958இல் 4ஆம் புத்தகம் 924ஆம் வெளியீடாகவும் கழகவழி வெளியிடப்பெற்றன.

ஆசிரியர் திரு அ. க. ந. அவர்கள் நெல்லையப்பர் திருக்கோயிலிலும், நெல்லைத் தருமை யருள்பெறு அருணகிரி இசைக் கழகத்திலும் பத்தாண்டுகளாகத் தொடர்பாகத் திருக்குறள் விரிவுரையாற்றி வந்தனர். ஒருசில பேச்சுகளை நேரிற் கேட்டு இன்புறும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவே 'வள்ளுவர்

சொல்லமுதம்' என்ற தலைப்பில் சில நூல்களை எழுதித் தருமாறு விரும்பிக் கேட்டனன். அவரும் அதற்கிசைந்து எழுதித் தந்தவையே இந்நான்கு சீரிய நூல்களுமாகும்.

முதற் புத்தகத்தில் 'திருக்குறள் தெள்ளமுதம்' முதற் கட்டுரையாகவும், 'ஊக்கமும் ஆக்கமும்' என்பது பதினோராவது கட்டுரையாகவும் அமைந்துள்ளன.

இரண்டாம் புத்தகத்தில் 'தானமும் தவமும்' முதற் கட்டுரையாகவும், 'பெரியரும் சிறியரும்' ஒன்பதாவது கட்டுரையாகவும் திகழ்கின்றன.

மூன்றும் புத்தகத்தில் 'நாடும் அரசும்' முதற் கட்டுரையாகவும், 'வினையும் துணையும்' ஒன்பதாங் கட்டுரையாகவும் விளங்குகின்றன.

நான்காம் புத்தகத்தில் 'துறவும் உணர்வும்' முதற் கட்டுரையாகவும், 'அரணும் உரனும்' எட்டாம் கட்டுரையாகவும் மிளிர்கின்றன.

ஆசிரியர் தமது அணிந்துரையில் வரைந்துள்ளது அடியிற் காண்க :

"திருவள்ளுவர் பெருமான் அருளிய திருக்குறள் ஒரு தெளிந்த நீரோடை. அஃது ஈரடி ஆழமுடையது போல் தோன்றுகிறது. ஆனல், அந்நீரோடையில் மூழ்குவார்க்கு ஆழத்தின் எல்லை அறிய முடியாத அருமை யுடையதேயாகும். அதன்கண் ஆழ்ந்து மூழ்கிக் கூர்ந்து நோக்கினல் மணியும் பவளமும் அனைய கருத்துக்குவியல் கணக்கிறந்து நிறைந்து கிடப்பதைக் காணலாம். அத்தகைய கருத்து மணிகள் செறிந்த சிறப்பை ஓரளவு அறியும் பேறு பெற்ற எளியேனும் 'வள்ளுவர் சொல்லமுதம்' என்ற பெயருடன் நான்கு புத்தகங்களை ஆக்கினேன்.

"எளியேன்பால் அமைந்த ஒரு சிறு எழுத்து வன்மையையும் பழுத்துக் கனியுமாறு செய்யவேண்டும்; அதன் பயனைத் தமிழர் துய்க்குமாறு செய்யவேண்டும் என்ற பெருவிருப்பால் என்னைப் பலகால் நூல்கள் எழுதுமாறு ஊக்கிவரும் தமிழ்ப் பெருங்காவலராய கழக ஆட்சிப் பொறுப்பாளர் உயர்திரு வ. சு. பிள்ளையவர்கட்கு என்றும் மாருத நன்றியுடையேன்."

'வள்ளுவர் சொல்லமுதம்' நான்கு புத்தகங்களும் தெய்வத் திருக்குறளைப் பற்றிக் கட்டுரை எழுதுவார்க்கும், அவைகளில் பேசுபவர்கட்கும், உரையாடலில் திருக்குறள் மணிகளை எடுத்தியம்புதற்கும் பெரும்பயன் தருவதாகும்.

1968இல் திருச்சி வானொலியில் 'வள்ளுவர் உலகம்' என்ற தலைப்பில் சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமி பிள்ளை, திருக்குறளார் முனிசாமி முதலியோர் பேசியதைக் கேட்டு மகிழ்ந்தோம். 1972 நவம்பர் முதல் சென்னை வானொலியில் 'குறளமுதம்' என்ற தலைப்பில் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்கள், நீதிமன்ற நடுவர்கள், தமிழறிஞர்கள், அரசியல் தலைவர்கள் முதலியோர் பேசிவருதலைக் கேட்டு மகிழ்ச்சியுறுகின்றோம்.

வித்துவான் திரு அ. க. ந. அவர்கள் பள்ளி வகுப்புகட்குத் துணைப்பாட நூல்களாக அமையும் பொருட்டு இலக்கிய அமைச்சர்கள், காவியஞ் செய்த மூவர், தமிழ் காத்த தலைவர்கள், இலக்கியத் தூதர்கள், தமிழ் வளர்த்த முனிவர்கள், அறநூல் தந்த அறிவாளர், முத்தமிழ் வளர்த்த முனிவர்கள், முதல் குடியரசுத் தலைவர், முதலமைச்சர் காமராசர், சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை ஆகிய பத்து நூல்களை எழுதித் தந்தனர். பாடநூல் குழுவினரின் ஒப்புதல் பெற்றுப் பல பள்ளிகளில் அவை பாடமாக வைக்கப்பெற்றன. அவற்றால் ஆண்டுதோறும் ஆசிரியர்க்கு விற்பனையூதியம் அளித்து வரப் பெற்றது. 1971 முதல் பாடநூல்களை யெல்லாம் தமிழகவரசே வெளியிட்டு வருகின்றமையால் ஆசிரியர்க்கு விற்பனையூதியம் கிடைப்பதற்கு வழியில்லாது போயிற்று.

மாணவர்கட்குப் பல ஆண்டுகளாகத் தமிழ் கற்பித்துப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களிற் சிலர் பலதுறை அறிவும் செந்தமிழ் நடையில் உரைநடை நூல்கள் எழுதும் திறமுமுடையவர்களாயுள்ளனர். அவர்கள் எழுதிய சிறந்த துணைப்பாட நூல்கள் பதிப்பாளர் சிலரால் ஆண்டுதோறும் வெளியிடப் பெற்றன. இப்போது அவ்வாறு பல்வேறு தலைப்புகளில் அறிஞர்களைக்கொண்டு பள்ளிகட்குத் துணைப்பாட நூல்களை எழுதும் வாய்ப்பு அடியோடு இல்லாதுபோயிற்று. இது தமிழ் வளர்ச்சிக்கு ஏற்பட்ட பேரூறேயாகும் எனின் மறுப்பதற்கில்லை.

டாக்டர் சேதுப்பிள்ளையவர்கள் 25-4-1961இல் இறையடி சேரவே அவர்களுடைய வரலாற்றை விரைந்து எழுதித் தரும் ஆற்றலுடையவர் திரு பிள்ளையவர்களோடும் அவர்தம் அணுகிய உறவினர்களோடும் நெருங்கிப் பழகியவரும், அவர்களைப்போல் பேச்சிலும், எழுத்திலும் மக்கள் உள்ளங் கவர்ந்தவருமாகிய வித்துவான் திருக்குறள்மணி அ. க. நவநீத கிருட்டிணனவர்கள்தாம் எனக் கருதி அவருக்கு என்னிட

மிருந்த குறிப்புகளை யெல்லாம் அனுப்பிக் கடிதம் எழுதிக் கேட்டேன். அவர் அதற்கிசைந்து முதற்கண் 'டாக்டர் சேதுப்பிள்ளை' என்ற தலைப்பில் 212 பக்க அளவில் விரிந்ததொரு நூலை 'மேடைப் பேச்சு' முதல், 'இரங்கலுரைகள்' ஈறுக 27 தலைப்புகளில் செந்தமிழ் நடையில் எழுதித் தந்தனர். ஆசிரியரும் யானுமாகத் தொகுத்த படங்கள் நூலின்கண் இணைக்கப் பெற்றுள்ளன. அடுத்துப் பள்ளித் துணைப்பாட நூலாக அமையும் வகையில் 112 பக்க அளவில் 'சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை' என்ற நூலை எழுதித் தந்தனர். அது பாட நூலாக ஏற்றுக்கொள்ளப் பெற்றுப் பல ஆயிரம் படிகள் விற்பனையாயிற்று.

மேலே குறிப்பிட்ட நூல்களை எழுதிய செஞ்சொற் புலவர் திரு அ. க. ந. சென்னை வந்து திரும்பிய 10-4-1967 இரவு நெல்லைச் சந்திப்பில் நடந்த கைத்தறி வார விழாவில் பேசிக் கொண்டிருந்தபோது கைத்தறி நெசவாளர்கள் தறியில் வேலை செய்யும்போது 'திருவாய் பொலியச் சிவாயநம சிவாயநம' என்று ஓதிக்கொண்டே நெய்தல் வேண்டுமென்று முழங்கிய போதே மயங்கி விழுந்து இறையடி சேர்ந்த துன்பச் செய்தி யான் இயல்பாக 11-4-67 பகல் 12 மணிக்கு நெல்லை சேர்ந்ததும் தெரிந்து ஆற்ருெணுத் துயரமடைந்தேன். மாலை எரியூட்டுதலுக்குச் சென்று நண்பர்களோடு எனதாற்ருமை யுரையினைக் கண்ணீர் சொரிய நெஞ்சுருக நாத்தழுதழுக்கப் பேசினேன்.

16 அகவையிலிருந்து 2 அகவை வரை பெண் மக்கள் மூவரையும் ஆண் மக்கள் ஐவரையும் விட்டுப் பிரிந்த அவர் பொருள்நிலை மிகவும் இரங்கத்தக்கதாயிருந்தது. அரசு பாட நூல்களை வெளியிட முற்பட்டமையால் அவர் குடும்பத்துக்குக் கிடைக்கப்பெற்ற புத்தக விற்பனை ஊதியம் (ராயல்டி) நின்று போயிற்று. எனவே, அரசு அவர் குடும்பத்துக்குத் திங்கடோறும் நூறு ரூபாவுக்குக் குறையாமல் உதவி அளித்து வருதல் 'புலவரைப் போற்றுதும் புலவரைப் போற்றுதும்' என்ற புகழ் மொழியைப் பறை சாற்றுவதாயமையும். தமிழாசிரியர் தலைமைக் கழகம் அதற்கு ஆவன செய்தல் வேண்டுமென்பது எனது பெருவிருப்பமாகும்.

(தொடரும்)

—வ. சு.

# இறைமையில் இசைந்த வாழ்வு

[திரு. மா. சண்முகசுப்பிரமணியம்]

(முன் இதழ் சகூ0 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இறையுணர்வும் அன்புணர்வும்

*அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு.* —*குறள் 80*

**"என்புதோல் போர்த்த உடம்பு"**

சில ஆண்டுகளுக்கு முன் செய்தியிதழ்களிலே வெளியான செய்தியொன்று: சென்னை மாநகர வீதியொன்றில் நடந்து சென்றுகொண்டிருந்த ஒருவர்மீது உந்துவண்டி ஒன்று மோதியதால் அவர் அடிபட்டுப் பலத்த காயங்களுடன் வீதியின் ஓரத்தில் கிடந்தார். அப்பொழுது காலை ஒன்பது மணி. கசியும் இரத்தம் மண்ணிலே பெருக மயங்கிக் கிடந்த அவரை எவருமே கவனிக்கவில்லை! ஒரு மணி நேரமாக வீதியில் சென்றுகொண்டிருந்த பலரும் விழுந்து கிடந்த அவரைப் பார்த்துக்கொண்டே சென்றார்கள்! ஆனால், ஒருவரும் அவருக்கு உதவியளித்துக் காப்பாற்ற முயலவில்லை! அன்றாடக் கூலி வேலைக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு பெண்மணி இக் காட்சியைக் கண்டதும் மனமிரங்கித் தன் கையிலிருந்த பணத்தைக் கொடுத்து வாடகைக் காரை அமர்த்தி அடிபட்டுக் கிடந்தவரை ஏற்றிப் பொது மருத்துவமனைக்கு இட்டுச் சென்றாள். மருத்துவமனையில் பெற்ற சிகிச்சையால் அடிபட்டவர் உயிர் பிழைத்தார். அடிபட்டுக் கிடந்தவர்மீது இரக்கப்பட்டு அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற ஏழைப் பெண்மணியின் இதயப் பண்பினை எல்லாரும் பாராட்டினர்!

ஒருமணி நேரமாக இரத்தத்திலே தோய்ந்து கிடந்த மனிதரைக் கண்டும் காணாததுபோல் வீதியிலே சென்றுகொண்டிருந்தனரே நூற்றுக்கணக்கானோர், அவர்களை என்னென்பது? அவர்களைத்தான் "என்புதோல் போர்த்த உடம்பு"கள் என்கின்றது, திருக்குறள்.

*"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு."* —*குறள் 80*

**நாம் நடைப்பிணங்களாக இல்லாமல் நல்ல மனிதர்களாக வாழ வேண்டுமெனில் அன்பு என்ற உணர்வு நம் அகத்திலே ஊறிப்**

பெருக வேண்டும். அகத்திலே ஊறும் இந்த அன்பு நீர் இல்லையெனில், நம் வாழ்க்கை வறண்டுவிடும்; வறண்டு பாலை வனம்போல் ஆகிவிடும். ஈரமற்ற பாலைநிலத்திலே மரம் தளிர்ப்பதுண்டா ? இல்லை. அதுபோல் ஈரமற்ற நெஞ்சுடையோர் வாழ்வு தளிர்க்காது என்கின்றார், அறநூலாசிரியர்.

*அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்*
*வற்றல் மரந்தளிர்த் தற்று.* —குறள் 78

சோலைவனமாகத் திகழ வேண்டிய சமுதாய வாழ்வு உலர்ந்துபோன பாலைவனமாகி விடுகிறது, நம் உள்ளத்து ஊறும் அன்பு நீர் வற்றிவிடுவதால். வற்றிய நிலையின் வடுக்கள் தாம் இன்று நிலவிடும் எத்தனையோ சமுதாயத் தீமைகள் !

ஒருவர் நலனில் மற்றொருவர் காட்டும் அக்கறையும் ஆர்வமுமே சமுதாய வாழ்விற்கு அடிப்படையாக அமைகின்றன. அன்புணர்வு உள்ளத்தில் இருந்தால்தான் பிறர் நலம் பற்றிய ஆர்வம் நமக்கு எழுகின்றது. இத்தகைய ஆர்வமே நட்பாக மலர்கின்றது.

*அன்புஈனும் ஆர்வம் உடைமை அ.துஈனும்*
*நண்பென்னும் நாடாச் சிறப்பு.* —குறள் 74

மக்களிடை மலரும் நட்பு என்ற நற்பண்பிற்கும் அன்புணர்வே அடிப்படையாகின்றது. அன்பு இல்லையேல் ஆன்மநேய ஒருமைப்பாடு இல்லை.

**இறையுணர்வும் அன்புணர்வும் :**

ஆன்மநேய ஒருமைப்பாடு வேண்டுமெனில் இறையுணர்வு நம் இதயத்திலே இசைதல் வேண்டும்.

இறைமையே எங்கும் நிறைந்துள்ளது, இறைமை இன்றி எப்பொருளும் இல்லை என்று கண்டோம்.

*"ஒன்றுநீ யல்லை யன்றி ஒன்றில்லை"* —திருவாசகம் பக்கம், 107

*"எல்லா உயிர்கட்கும் உயிரே"* —திருவாசகம் பக்கம், 106

எல்லா உயிர்களுக்கும் உயிராக இறைமை உள்ளது என்றால், எல்லா உயிர்களுமே இறைமையால் இணைக்கப்பட்டுள்ளன என்பதுதானே பொருள் ? எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் இறைமை இணைந்துள்ளது எனில், எல்லாப் பொருள்களும் எல்லா உயிர்களும் இறைமையால்

இணைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகும். **இந்த இறைமை இணைப்பினை உணர்வதுதான் அன்புணர்வு ஆகின்றது.** இறையுணர்வில் எழுவது அன்புணர்வு ஆவதால், அன்புணர்வுக்கு அடிப்படையாக இறையுணர்வு இருப்பதால், "அன்பே கடவுள்" என்று அறுதியிட்டுக் கூறியுள்ளனர்.

**உயிர் உறவால் உடன்பிறந்தோராகின்றோம் :**

"மனித இனத்தினரே! ஒரே தாய் தந்தையரிடமிருந்து தான் நீங்கள் அனைவரும் படைக்கப்பெற்றீர்கள்."

—இது புனிதக் குரானின் பொன் மொழி. (XLIX : 13)

"எந்தையாய எம்பிரான் மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய் தம்பிரான்..............'  —திருவாசகம் 35

தமக்கும் மற்றும் யாவர்க்கும் தந்தையாகவும் தாயாகவுமே இறைமையைக் காண்கின்றனர் மெய்யறிவாளர்கள். இறைமை என்ற ஒரே தந்தையை, ஒரே தாயைப் பெற்றவர்கள் நாம் அனைவரும். இவ்வுலகத்திலுள்ள நம் பெற்றோர்கள் நம் உடலுக்குப் பெற்றோர்கள்; நம் உயிருக்குப் பெற்றோராக உள்ளது இறைமை. உடலுறவால் ஒரு சிலர்தாம் நம் உடன் பிறந்தோராகின்றனர்; ஆனால், நம் உயிருறவால் உலகோரனைவரும் நம் உடன்பிறப்பாகின்றனர். **இறைமை என்ற தந்தையையும் தாயையும் பெற்ற நாமனைவருமே உடன்பிறந்தோர்களாகின்றோம்.**

உடன்பிறந்தோரிடையே எத்தகைய உண்மையான, உறுதியான அன்புணர்வு நிலவவேண்டும்? உயிருறவால் நாமனைவரும் உடன்பிறந்தோர் என்ற உண்மையை நாம் உணர்ந்துவிடில் நம்மிடையே அன்புணர்வு தானாகப் பிறந்து விடும்.

அன்புணர்வு இன்றி உலக வாழ்வு இல்லை. பெற்ற தாய்க்குப் பிள்ளைமீது அன்பு இல்லையெனில் பிள்ளைக்கு வாழ்வேது? கன்றின்மீது பசுவுக்கு அன்பில்லை எனில் கன்றின் கதியென்ன? கணவன் மனைவி, உற்றார் உறவினர், நண்பர்கள் இவர்களிடையே அன்பு என்ற இணைப்பு இருப்பதால்தான், மக்கள் ஒருவருக்கொருவர் அன்பு காட்டுவதால்தான் சமுதாய வாழ்வு நிலைத்து நிற்கின்றது.

பொதுவாக, நாம் அனைவருமே "நான்", "எனது" என்ற எண்ணத்தோடுதான் வாழ்கின்றோம். "எனது சொத்து", "எனது செல்வம்" என்ற எண்ணத்தினால் நம்மைச் சுற்றி ஒரு

கோட்டையைக் கட்டிக்கொள்ளுகின்ருேம். நாம் பிறர்மீது அன்பு காட்டும்பொழுதுதான் "நான்" என்ற எண்ணத்தால் எழுப்பியுள்ள கோட்டை தகர்கின்றது. அன்புணர்வு தோன்றும் பொழுதுதான் "நான்" என்ற தனியெண்ணம் மறைகின்றது. அப்பொழுதுதான் மனிதன் தன்னலம் மறக்கும் தகைமை யாளன் ஆகின்ருன்; ஆணவம் அழிந்த ஆன்ருேன் ஆகின்ருன்.

"மனித வாழ்வின் அடிப்படைப் பிரச்சினே "நான்" என்ற ஆணவவுணர்வேயாகும்..........இது வாழ்விலிருந்து பிரிக்க முடியாதது. வாழ்விற்கு மறுபெயர் "ஆணவம்" என்றுகூடச் சொல்லலாம் .......உயர்ந்த சமயங்களும் தத்துவங்களும் கொண்டுள்ள தலையாய கொள்கை இந்த ஆணவத்தை அடக்குவது எவ்வாறு என்பதுபற்றியதே. அவையனைத்தும் காணும் வழி ஒன்றே ஒன்றுதான். அன்புணர்வால்தான் ஆணவவுணர்வினை அடக்க முடியும் என்பதையே அவை போதிக் கின்றன."

உலகப்புகழ் பெற்ற வரலாற்று நூலறிஞர் ஆர்னுல்ட் டாய்ன்பி இவ்வாறு கூறுகின்ருர்.

"I am convinced, myself, that man's fundamental problem is his human egocentricity. ........In fact egocentricity is inseparable from life; it might be said to be another name for life.......All the great historic philoshophies and religions have been concerned, first and foremost, with the overcoming of egocentricity......They all find the same remedy. They all teach that egocentricity can be conquered by love."

—Arnold Toynbee in 'Surviving the Future'. Oxford University Press 1971.

" 'நான்' என்ற உணர்வினைக் கடந்து அன்பு காட்டி அன்பின் வழி செல்லுவதுதான் மனித வாழ்வின் ஆன்மீக நோக்காகும். இதனை எய்துவதே உயிர் வாழ்வதன் பயனு கின்றது" என்றும் அவர் கூறுகின்ருர்.

"Physical life is valuable for man only in so far as it gives him an opportunity for fulfilling the spiritual purpose of human life which is to transcend the self by loving and by following love's lead."

—Arnold Toynbee in 'Surviving the Future'. Oxford Uuiversity Press 1971.

**அன்புடையார் பிறர்க்குரியர் :**

கனியைத் தரும் மரத்திற்குக் கனியால் என்ன பயன்? ஆதவனளிக்கும் ஒளியால் ஆதவனுக்குப் பலன் உண்டா? இல்லை. ஆற்றினது நீரால் ஆற்றுக்கு ஏது பயன்? மயிலின் ஆட்டத்தை மயிலா கண்டு களிக்கின்றது? குயிலின் இசையினைக் குயிலா கேட்டு மகிழ்கின்றது? உப்பினது சுவையால் உப்பிற்கு ஏது பயன்? இவையெல்லாம் தமக்கென இல்லை. ஆனால், மனிதனே? அவன் தனக்கெனவே வாழ நினைக்கின்றான்! எனினும், அவனது அன்புணர்வு பிறர்க்கென வாழும் பெற்றிமையை அவனுக்கு அளிக்கின்றது. அன்பில்லாதவனே தனக்கென வாழ்ந்து மாள்கின்றான்.

*அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு,*　　—குறள் 72

**அன்புணர்வே இன்பவுணர்வு : அன்பே இன்பம் :**

மனிதன் தனக்கென மட்டுமே வாழ முயலுவது இயற்கை நியதிக்கு மாறானது. இணைந்த அமைப்பாகவே இயற்கை உள்ளது. எனவே, பிரிந்து வாழ முயலுவது இயற்கைக்கு முரணானதாகும். இணைந்த உணர்வில்தான் இயற்கையின் இன்பத்தைக் காண முடியும். இணைந்த உணர்வில் எழுவது இன்பம், பிரிந்த உணர்விலே பிறப்பது துன்பம்.

உருளும் வெண்ணெயில்தான் நறுமணம் தெரிகின்றது. அதுபோல், இளகும் இயத்தில்தான் இன்பம் பிறக்கின்றது. அன்பு என்ற இதமான உணர்வினால் இளகும் இதயத்திலே இன்பமணம் கமழ்கின்றது. உயிர்கள் இணைந்துள்ளன என்ற உணர்வால் எழுவது அன்புணர்வு. எனவே, எவர்மீதும் நாம் அன்பு காட்டும்பொழுது இன்பம் இயல்பாகவே பிறக்கின்றது.

*அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து*
*இன்புற்றார் எய்துஞ் சிறப்பு.*　　—குறள் 75

மார்பகத்தின் அமுதினை மதலைக்கு ஊட்டும் தாயின் முகத்தினில் தவழ்ந்திடும் இன்பம் எதைக் குறிக்கின்றது? அன்பு சுரக்கும் நெஞ்சிலே இன்பம் பிறக்கும் என்ற பேருண்மையைத் தானே!

*"அன்பிற் சிறந்த தவமில்லை, அன்புடையார்*
*இன்புற்று வாழ்தல் இயல்பு."*　　—பாரதியார்

அன்பில்லாத வாழ்விலே இன்பம் இருப்பதில்லை. அன்புணர்வால் நம் இதயத்தில் எழும் உணர்வுதான் உண்மை

யான இன்பவுணர்வு. இன்பத்திற்கும் அன்பிற்கும் ஆதாரமாக உள்ளது இறையுணர்வு. ஆதலால்தான் அடியார்கள்,

''இன்பமே என்னுடை அன்பே'' —திருவாசகம்

என்று இறைமையை அழைக்கின்றனர்.

**சமயங்களனைத்தின் சாரம்:**

இயேசுநாதரைப் பார்த்து ஓர் அறிஞன் கேட்டான், ''ஒழுக்க நெறிகளிலெல்லாம் உயர்ந்த நெறி எது?'' என்று.

''உள்ளம் உணர்ச்சி, அறிவு ஆற்றல் அனைத்தோடும் இறைவன்மீது அன்பு செலுத்து. அயலானையும் உன்னைப்போல் கருதி அன்பு செலுத்து. நெறிகளுக்கெல்லாம் உயர்ந்த நெறி இதுவேயாகும்'' என்று போதித்தார் பெருமான். —மார்க் 12

இறையுணர்வு அன்புணர்வு இரண்டும் இணைந்தேயுள்ளன என்பதைக் காட்டுகிறது இந்த ஞான போதனை.

அயலார்மீது அன்பு காட்டுவது எவ்வாறு நெறிகளுக் கெல்லாம் உயர்ந்த நெறியாகின்றது?

நாம் எவர்மீது அன்பு செலுத்துகின்றோமோ அவருக்கு நாம் எவ்விதமான கேடும் நினைப்பதில்லை. அவர் இன்பமாக இருக்க வேண்டுமென்றே நாம் விரும்புகிறோம். அவருக்குத் துன்பம் வந்தால் அது நம் துன்பம் ஆகின்றது. அவருடைய இன்பத்திலும் துன்பத்திலும் நாம் பங்குகொள்ளுகிறோம். இவ்வாறு எல்லாருடைய இன்பமும் துன்பமும் நம் இன்ப துன்பங்களாகும்பொழுது, எவருக்காவது தீங்கிழைக்க நாம் முற்படுவோமா? மாட்டோம்.

''பிறன்மனை நயவாதே, பிறன் பொருள் விழையாதே, கொலை களவு செய்யாதே என்பன போன்ற நன்னெறிக ளெல்லாம், 'அயலார்மீது அன்பு காட்டு' என்ற ஒரே விதியில் அடங்கிவிட்டன. அன்பு அயலார்க்குத் தீங்கிழைப்பதில்லை. எனவே, அன்பு நெறியிலே அனைத்து நெறிகளும் அடங்கி யுள்ளன'' —பால் என்ற திருத்தொண்டரின் வாக்கு இது. (Romans 13)

ஆம். நம் வாழ்க்கைக்கு அடிப்படையான நெறி அன்பு நெறியே ஆகும். அன்பு என்ற பண்பு நம் உள்ளத்திலே அமைந்துவிட்டால் எவருக்குமே நாம் கேடு நினைக்கக்கூட

மாட்டோம். கேடு நினைத்தால் அல்லவா கேடு இழைத்தல் இயலும் ?

“உங்களுக்குத் தீங்கு இழைத்தோர்க்கும் நீங்கள் நன்மையே செய்யுங்கள். அதுதான், தீங்கிழைத்தவன் தலையிலே நெருப்பைக் கொட்டுவது போலாகும். தீமை உங்களை வென்றுவிடக்கூடாது. நன்மையைக்கொண்டு நீங்கள் தீமையை வெல்ல வேண்டும்.” இதுவும் பால் என்ற அத்திருத்தொண்டரின் வாக்குத்தான். (Romans 13)

இதனையே,

*“இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயம் செய்து விடல்”* —*குறள் 314*

என்ற குறளும் கூறுகின்றது.

“அல்லாவிற்கு ஆட்பட்டு அனைவர்மாட்டும் நன்மையே செய்பவர்களை அச்சமும் துயரமும் அண்டுவதில்லை” —2 : 112 என்பது புனிதக் குரானின் பொன்மொழியாகும்.

இவ்வாறு, உலகத்துச் சமயங்களனைத்தும் அன்புடைமை என்ற அரிய பண்பினைப் போற்றுகின்றன.

**வேண்டா உணர்ச்சிகள் விலகுகின்றன :**

அழுக்காறு, கோபம், வெறுப்பு இவ்வுணர்ச்சிகளின் வயப் பட்டே நாம் பல தீமைகளைப் பிறருக்கு இழைக்கத் துணிகின் றோம். “அழுக்காறு என ஒரு பாவி” என்று பொறாமைக் குணம் கண்டிக்கப்படுகின்றது. கோபவுணர்ச்சி கோபப்படு கின்றவர்களையே கொன்றுவிடும் கொடுமையான உணர்ச்சி யாகும். திடீரென்ற கோபத்தால் மண்டையிலுள்ள இரத்த நாளங்கள் வெடித்து மரணம் நேருகின்றது என்பதை மருத்துவ நூல்கள் கூறுகின்றன. “சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி” என்று சினத்தின் கொடுமை கூறப்படுகிறது. கடுமை யான வெறுப்புணர்வு நம் உடலின் உள்ளுறுப்புக்களைப் பாதிக் கின்றன. இவ்வாறு பொறாமை, சினம், வெறுப்பு இவ் வுணர்ச்சிகள் நம்மையே அழித்துவிடக் கூடியன. இவ் வுணர்ச்சிகளே நாம் பிறருக்குத் தீங்கு இழைப்பதற்குக் காரண மாகின்றன என்பது ஒருபுறமிருக்க, அவை நம்மையும் அழித்து விடுகின்றன. எனவே, இவ்வுணர்ச்சிகளுக்கு நாம் இரையாகி விடுவது கூடாது.

இவ்வுணர்ச்சிகளினின்றும் நம்மைக் காப்பாற்றிக்கொள்வது எவ்வாறு ?

நம் உள்ளத்தில் அன்புணர்வு நிலவினுல் இவ்வுணர்வுகள் தோன்றுவதற்கு இடமேயில்லை. நாம் எவர்மீது அன்பு செலுத்துகின்றேமோ அவரை நாம் வெறுப்பதில்லை, அவர்மீது அழுக்காறு கொள்ளுவதில்லை, கோபப்படுவதும் இல்லை. இவ்வாறு, நம் உடலுக்கு ஊறு விளைக்கும் உணர்ச்சிகள் உள்ளத்திலே தோன்ருமல் தடுப்பதற்கு அன்புணர்வே அருமருந்தாக அமைகின்றது.

இறையுணர்வால் நமக்கும் மற்ற உயிர்களுக்கும் உள்ள உண்மையான தொடர்பினை உறுதியாக உணருகின்றேம். ஆதலால், பிற உயிர்களின் இன்பம் நம் இன்பமாகின்றது. பிற உயிர்கள் படும் துன்பம் நம் இன்பத்தைக் குலைத்துவிடுகின்றது. எனவே, எல்லா உயிர்களும் இன்பமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறேம்.

*எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே*
*அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே.* —தாயுமானவர்.

இத்தகைய எண்ணத்தால் நம்மை ஏற்றமுற வைப்பது அன்புணர்வுதான். அந்த அன்புணர்வுக்கு அடிப்படையாவது இறைமையுணர்வு.

**சமய நெறிகளும் அன்பு நெறியும் :**

இறையுணர்வுதான் அன்புணர்வுக்கு அடிப்படையாகின்றது என்ற உண்மையை நாம் நினைக்கும்பொழுது நம் உள்ளத்திலே ஓர் ஐயப்பாடு எழுகின்றது. புரியாத புதிராக உள்ளது அந்த ஐயப்பாடு.

பளபளக்கும் அணிகலன்களும் பகட்டான ஆடைகளும் அணிந்துகொண்டு ஆலயம் செல்லுகின்றனர் ஆண்டவனைக் காணவென்று. அந்த ஆலயத்தின் முன்னுல் ஆதரவற்ற அகதிகளோ பல பேர்கள் ! உலகத்தின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்குச் செல்லுகின்றனர் புண்ணியத்தலங்களில் போற்றி வழிபடுவதற்கென. ஆனுல், அவர்கள் வசிக்கும் ஊர்களிலோ வறியவர் பலருள்ளனர் ! திருவிழா எடுப்பதற்கெனத் திரளான பொருளைச் செலவிடுகின்றனர். ஆனுல், தெருவோரத்திலே நிற்கும் திக்கற்றவர்களைக் காண்பாரில்லை ! இவையெல்லாம் சமயங்களின் தோல்வியைத்தானே எடுத்துக்காட்டுகின்றன ?

இன்றைய உலகைக் காணும் நம் அனைவருக்குமே இந்த ஐயப்பாடு எழுவது இயல்புதான்.

ஆனால், இது மதங்களின் தோல்வி அன்று; இது மனிதனின் தோல்வி; வழிகாட்டும் நெறிகளின் குறைபாடன்று, விழியிழந்து நிற்போரின் குறைபாடு என்பது நாம் சிறிது சிந்தித்தால் புலனாகும்.

அன்புணர்வோடு அடுத்தவர்க்கு உதவுவதுதான் ஆண்டவனை வழிபடுவதாகும் என்று எடுத்து எடுத்துக் கூறியுள்ளனர் இறையுணர்வு போதிக்கும் ஏற்றமிகு சான்றோர்கள். நம் உள்ளங்களில்தான் அஃது உறைக்கவில்லை.

இதோ இயேசுநாதர் கூறுகின்றார் இறுதி நாளிலே மனிதனின் மதிப்பு எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பதனை :

''நான் பசியோடு இருந்தேன், நீ உணவளித்தாய்; தாகத்தினால் தவித்தேன், பருகுவதற்குக் கொடுத்து என் தாகத்தைத் தணித்தாய். முன்பின் தெரியாத என்னை உன் வீட்டிற்கு இட்டுச் சென்றாய். கந்தையை அணிந்திருந்த எனக்குக் கட்டிக் கொள்ளத் துணி கொடுத்தாய். நோயால் வாடிய எனது நோய் தீர்த்து உதவினாய். சிறையிலிருந்த எனக்குத் தேறுதல் கூறினாய். ஆதலால், நீ நற்பதம் பெறுகின்றாய்''—இவ்வாறு இறைவனின் குரல் கூறுகின்றது.

''ஐயோ ! இறைவனை நான் எங்குக் கண்டேன் ! இறைவனின் பசியையும் தாகத்தையும் நான் தீர்க்கவாவது, உடை கொடுத்து உதவுவதாவது !''—என்று வியப்பிலே ஆழ்கின்றான் மனிதன்.

''உலகிலே நீ பிறருக்கு உதவினாயே அவர்களெல்லாம் நான்தான். நலிந்தோரை நாடி நற்பணிகள் செய்தாயே அந்த நலிந்தோரெல்லாம் நானேதான். எனக்கு உதவிய உனக்கு ஈடில்லா நற்பதம் அளிக்கின்றேன். வறியோர்க்கு உதவாத வன்கணாளர்கள் என்மீது அன்பில்லா ஈனர்கள். அவர்களுக்கு நற்பதம் கிடைப்பதில்லை'' —இது இறைவனின் குரல்.

—Mathew 25

அயலார்மீது காட்டும் அன்பே ஆண்டவன்மீதுள்ள அன்பாகும் என்ற உண்மையை இதைவிடத் தெளிவாக எவ்வாறு எடுத்துக்கூற இயலும் ?

மக்கள் எல்லாரும் நடமாடும் கோவில்கள். நடமாடுங் கோயில்களான மக்களுக்கு உதவுவது கோவிலிலே படமாக உள்ள இறைவனையும் சேருகின்றது. ஆனால், இறைமையின் உருவங்களைக்கொண்ட கோவில்களில் மட்டுமே செய்யப்படும் எதுவும் எவரையும் சேருவதில்லை என்று உறுதியோடு கூறியுள்ளனர் உண்மையுணர்ந்த ஞானிகள்.

> *''படமாடுங் கோவிற் பகவற்கொன் றீயில்*
> *நடமாடுங் கோவில் நம்பர்க்கங் காகா*
> *நடமாடுங் கோவில் நம்பர்க்கொன் றீயில்*
> *படமாடுங் கோவிற் பகவற்க தாமே.''* —திருமந்திரம் 1857

இவ்வளவு உறுதியுடன் கூறப்படும் உண்மை நம் உள்ளத்திலே உறையவில்லையெனில் குற்றம் நம்முடையதுதானே?

**உள்ளம் உருகுகிறது, அன்பு பெருகுகிறது :**

இரண்டு உலோகக் கட்டிகளை ஒன்று சேர்க்க வேண்டுமென்றால் அவற்றை உருக்குகின்றோம். உருகிய உலோகம் ஒன்றுகின்றது. இதுபோல்தான், உருகிய உள்ளங்கள் ஒன்று சேர்கின்றன, இளகிய இதயங்கள் இணைகின்றன.

இறையுணர்வு என்ற உண்மையைக் கண்ட நம் உள்ளம் உருகிப் பெருகுகின்றது. உயிர்களனைத்தோடும் உறவு கொண்டாடுகின்றது. இதையே அன்புணர்வு என்கின்றோம்.

உலகெலாம் நிறைந்துள்ள இறைமை நம் உடலுக்குள்ளும் இருக்கின்றது என்பதை உணர்ந்து உருகிப் பெருகும் உள்ளத்தையே வேண்டுகின்றனர் உண்மையடியார்கள் :

> ''ஊனே புகுந்த உனையுணர்ந்தே உருகிப் பெருகும் உள்ளத்தைக்
> *கோனே அருளுங் காலந்தான் கொடியேற்கு என்றோ கூடுவதே''*
> —திருவாசகம், பக்கம் 134

''உருகிப் பெருகும் உள்ளத்தைப் பெறுவதற்காகவே உனையுணர வேண்டும், உன்னை உணருவது உருகிப் பெருகும் உள்ளத்தைப் பெறுவதற்காகத்தான்'' என்பது எவ்வளவு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது! அன்புணர்வினைப் பெறுவதற்காக இறையுணர்வினை நாடுகின்றனர் நல்லடியார்கள்! அவர்களது குறிக்கோள் அன்புணர்வு, அதனை அடைவதற்கான வழிமுறை இறையுணர்வு. அன்புணர்வே அவர்கள் இலட்சியம், அந்த இலட்சியத்தை எய்துவதற்கான சாதனமாகவே இறையுணர்வினை அவர்கள் ஏற்றுகின்றனர்!

தன் அருமைத் தந்தையிடம் தனக்கு வேண்டிய பொருளைப் பிள்ளை கேட்பதுபோல், இறைமையை "அப்பா" என்று அழைத்து, "ஆருயிர்களுக்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" என்று வேண்டுகின்றனர் மெய்யடியார்கள் :

*"அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்*
*ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்"*

*—இராமலிங்கர் விண்ணப்பம்*

"ஞானஒளியே! எனக்கு வேறொன்றுமே வேண்டாம். எனக்கு வேண்டுவதெல்லாம் அன்பின் வழி நடத்தல்தான்" என்று இறைமையிடம் இறைஞ்சுகின்றனர் ஞானியர் :

*"தூண்டா விளக்கின் சுடரனையாய் தொண்டனேற்கும் உண்டாங்கொல்*
*வேண்டா தொன்றும் வேண்டாது மிக்க அன்பு மேவுதலே"*

*—திருவாசகம் பிரார்த்தனைப் பத்து*

அன்பு மேவும் வாழ்வு பெறுதவர்கள் தோல் போர்த்த எலும்புக் கூட்டினைத் தூக்கித் திரியும் உணர்ச்சியற்ற பாவைகளாகி விடுகின்றனர். அன்பு நிலவாத வாழ்க்கை பாலைவனமாக வறண்டு விடுகின்றது. எனவே, வாழ்விலே இன்பம் வேண்டுமெனில் அன்பு வேண்டும். அந்த அன்புணர் இறையுணர்விலிருந்தெ பிறக்கின்றது. இறையுணர்வே அன்புணர்வு ஆகின்றது, அன்புணர்வே இறையுணர்வு ஆகின்றது.

(தொடரும்)

---

*இறைகளோ டிசைந்த இன்பம்*
*இன்பத்தோ டிசைந்த வாழ்வு*
*பறைகிழித் தனைய போர்வை*
*பற்றியான் நோக்கி னேற்குத்*
*திறைகொணர்ந் தீண்டித் தேவர்*
*செம்பொனும் மணியுந் தூவி*
*அறைகழல் இறைஞ்சும் ஆரூர்*
*அப்பனே அஞ்சி னேனே.*

—சுந்தரர்.

# உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

**நுல்**[1] என்னும் வேர்ச்சொல்.

அடிப்படைக் கருத்து: தோன்றல்.

வழிநிலைக் கருத்துக்கள்; இளமை, சிறுமை, மெலிவு, நுண்மை, கூர்மை, நுனிமை, முன்மை முதலியன.

நுல்—நல்—நன்—நனை. நனைதல் = 1. தோன்றுதல். "மகிழ்நனை மறுகின் மதுரையும்" (சிறுபாண். 67). 2. அரும்புதல். "பிடவ மலரத் தளவ நனைய" (ஐங். 499).

நனை = அரும்பு. "மாநனை கொழுதி மகிழ் குயிலாலும்" (நற். 9).

நுல்—நுரு = 1. இளம் பிஞ்சு. 2. அறுத்த தாளில் விடும் தளிர். (யா. வ.).

நுரு—நொரு = 1. சிறுபிஞ்சு. 2. காய்ப்பு மாறினபின் தோன்றும் பிஞ்சு. 3. விளைந்த பயிரின் அடியில் அல்லது கணுவில் தோன்றும் இளங்கதிர்.

நொருக்காய், நொருப்பிஞ்சு என்பன யாழ்ப்பாண வழக்கு.

நுல் — நல் — நறு — நாறு. நாறுதல் = தோன்றுதல். "திருநாறு விளக்கத்து" (பதிற்றுப். 52 : 13). 2. பிறத்தல். "தேர் பத்தினன் மகவென நாறி" (கல்லா. 94 : 25). 3. முளைத்தல். "பாத்தி விதைத்தாலும் நாருத வித்துள" (பழ. 93).

நாறு = 1. முளை. (w). 2. நாற்று. நாறிது பதமெனப் பறித்து" (சீவக. 45).

நாறு—நாற்று = 1. இளம்பயிர். 2. பறித்து நடக் கூடிய பயிர்.

நுல்—நுன்—நுன்னி—நன்னி = 1. மிகச் சிறியது. 2. சிறியது, "நன்னிக் குரங்கும் கொசுகும் பகையோ நமக் கென்றுனே" (இராமநா. உயுத். 1).

நன்னிக்கல் = மருந்தரைக்குஞ் சிற்றம்மி. (தைலவ. பாயி. 12, உரை).

நன்னிநூல் = துணியின் ஓரத்திலுள்ள சிறுநூல் துணுக்கு. (W.).

நன்னிப் பயல் = சிறுபையன்.

சிறு பிள்ளைகளையும் சிற்றுயிரிகளையும் நன்னியுங் குன்னியும், நன்னி பின்னி என்பது உலக வழக்கு.

நுன் — நுனி = 1. நுனை, உச்சி. "நுனிக் கொம்ப ரேறினார்" (குறள். 476). 2. நுண்மை. (திவா.) ம. நுனி.

நுனித்தல் = 1. கூராக்குதல். 2. கூர்ந்து நோக்குதல் அல்லது ஆராய்தல். "நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்" (மணி. 19 : 80).

நுனிப்பு = கூர்ந்தறிகை. "நூனெறி வழாஅ நுனிப் பொழுக் குண்மையின்" (பெருங். வத்தவ. 7 : 34).

நுனி—நுதி = 1. நுனி. "நுதிமுக மழுங்க" (புறம். 31). 2. கூர்மை. 3. அறிவுக் கூர்மை. "நுதிகொணுகரிகன்" (சீவக. 1110). 4. தலை. "நுதிநுனைக் கோட்டாற் குலைப் பதன் ரேற்றங்காண்" (கலித். 101). 5. முன்பு. "நூற்றை வரோடு நடந்தாணுதி" (சீவக. 1933, உரை).

நுனி — நுனை = நுனி, முனை. "கூர்நுனை வேலும்" (புறம். 42).

நுல்—நொல்—நொற்பு—நொற்பம் = 1. நுட்பம், நொற்ப மான வேலை. (W.). 2. எளிமை. "நொற்ப வுலகத்தவர் நோய் தீர்த்து" (பஞ்ச. திருமுக. 611).

நொற்பம்—நொற்பன் = சிறியன், எளியன்.

நுல்—நூல் (எள்)—நோல்—நோலை = 1. எள்ளுருண்டை. "புழுக்கலு நோலையும்" (5 : 68). 2. எட்கசிவு. "அணங் குடை நோலை" (பு. வெ. 3 : 40).

நூல்—நூ = எள். (சூடா.). தெ. நூ, நூவு, நுவு, நுவ்வு.

நூ—நூவு = எள். (பிங்.). தெ. நூவு.

நூவு நெய் = எள் நெய் = எண்ணெய் (நல்லெண்ணெய்). தெ. நூனெ.

முதன் முதல் தோன்றியது ஆவின் (அல்லது எருமையின்) நெய். எள்ளிலிருந் தெடுக்கப்பட்ட நெய் எண்ணெய் (எள் நெய்) எனப்பட்டது. அது பின்னர் மாட்டுநெய் தவிரப் பிற நெய்வகைகட் கெல்லாம் பொதுப்பெயரான பின், நல் என்னும் அடைபெற்றது.

எள் மிகச் சிறிய கூலமாதலால், நூ (நூல்) எனப் பெயர் பெற்றது. எள்ளளவும், எள்ளத்தனையும், எட்டுணையும் என்னும் வழக்குகளை நோக்குக.

நூவு—நுவ்வு—நுவு—நுவல்.

நுவலுதல் = நுண்ணிய அறிவுச் செய்தியைச் சொல்லுதல். "மெய்தெரி வளியிசை அளவுநுவன் றிசினே" (தொல். 102). "நூலே நுவல்வோன் நுவலுந் திறனே" (நன். பாயி. 3).

நுவல்வோன் = அறிவுச் செய்திகளைக் கூறும் ஆசிரியன்.

நுவல்—நூல் = ஒரு பொருள் பற்றிய அறிவுத் திரட்டு; கலை, கல்வித்துறை.

பொத்தகம் என்பது ஒரு நூலைக் கூறும் ஏட்டுத் தொகுதி அல்லது தாட்கற்றை. பொத்தகக் களஞ்சியம் என்ன வேண்டியது, இன்று நூல் நிலையம் என வழங்குகின்றது.

நூற்றல் = செய்யுளியற்றுதல். "நொய்ய சொன்னூற்கலுற்றேன்" (கம்பரா. சிறப். 5).

நுவல் — நுவள் — நுவண் — நுவணம் = 1. இடித்த மா. 2. கல்வி நூல். (அக. நி.).

நுவண்—நுவணை = 1. நுட்பம். (திவா). 2. இடித்த மா. (திவா.). "மென்றினை நுவணையுண்டு" (ஐங். 285). 3. பைந்தினை. (பிங்.). 4. கல்விநூல். (சூடா.).

நுவணை—நுணவை = 1. எள்ளுருண்டை. சூடா. 2. இடித்த மா. (சூடா.).

நுவல் — நுவறு. நுவறுதல் = நுண்ணிதாக அல்லது பொடியாக அராவுதல். "நுணங்கர நுவறிய......மருப்பின்...... பேரியாழ்" (மலைபடு. 35).

நுவ்வு — நவ்வு — நவ்வி = 1. மான்குட்டி. "சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை" (புறம். 2). 2. இளமை. (சூடா.). 3. அழகு. "நவ்வித் தோகையர்" (கம்பரா. மாரீச. 14).

நுவல்—நவல்—நவர்—நவரை = சிறுகாய் வாழை வகை. "நவரை—வாழைப் பழத்தான் மதி" (பதார்த்த, 765). நவரை—நமரை.

நுல்—நூல் = நுண்ணிய இழை.

நூற்றல் = பஞ்சிழை யுண்டாக்குதல்.

நுல்—நுள்—நுள்ளுதல் = கூரிய உகிராற் கிள்ளுதல். ம. நுள்ளுக.

நுள்ளு = 1. கிள்ளு. 2. சிறு துண்டு அல்லது துணுக்கு.

நுள்—நுள்ளல் = சிறிய உலங்கு.

நுள்—நுள்ளான் = கடிக்குஞ் சிற்றெறும்பு.

நுள்ளல்—நொள்ளல் = சிறிய உலங்கு.

நுள்—நொள்ளை = கைக்குழந்தை (நெ. வ.)

நுள்—நுளம்பு = சிறிய உலங்கு (திவா.).

ம. நுழம்பு, தெ. நுஷுமு.

நுள்—நுளு—நொளு—நொளுவல் = (யா. வ.) 1. முற்றுநிலை. 2. இளம்பாக்கு. நொளுக்கல் = நொளுவல். நுள்—நுழு—நுழாய். நுழாய்ப் பாக்கு = இளம் பாக்கு (யா. வ.). நுழு—நுழுவல் = இளம் பாக்கு.

நுழு—நுகு—நுகும்பு = பனங் குருத்து. "பனை நுகும் பன்ன" (புறம். 249). ஒ. நோ.: தொழு—தொகு. நுகு—நுங்கு = 1. "இளம் பனங்காய். நுங்கின் றடிகண் புரையுங் குறுஞ்சுனை" (கலித். 108 : 40). 2. இளம் பனஞ்சுளை. "நுங்கு சூன் றிட்ட கண்". (நாலடி. 44). தெ. நுங்கு, ம. நொங்ஙு.

நுங்குப் பாக்கு = இளம் பாக்கு.

நுகு—நகு—நாகு = 1. இளமை. "நாகிலை" (சீவக. 1102). 2. இளம்பெண். 3. பெண். (தொல். மர. 3).

நுழு—நுழை. நுழைதல்=1. நுண்மையாதல். "நுழை நூற் கலிங்கம்" (மலைபடு. 561). 2. கூரிதாதல். "நுழைந்த நோக்கிற் கண்ணுள் வினைஞரும்" (மதுரைக். 517).

நுழை=1. நுண்மை (திவா.). 2. மதிநுட்பம் (W.).

நுழைவு=1. நுண்மை. "நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை" (தொல். உரி. 76). 2. நுண்ணறிவு. "நூலவர் நுழைவொடு நுழைந்து" (சூளா. இரத. 117).

நுழை—நூழை=நுண்மை (பிங்.)

நுள்—நுண்=1. மிகச்சிறிய. 2. கூரிய. 3. நொய்ய. 4. பருப்பொருளல்லாத. நுண்—நுண்மை.

நுண்—நுண்பு=நுண்மை. "பாவியேங்கண் காண்பரிய நுண்புடையீர்" (திவ். இயற். பெரிய திருவந். 8). க. நுண்பு.

நுண்பு—நுட்பு=நுண்மை.

நுட்பு—நுட்பம்=1. நுண்மை. "நெய்யினும் யாருமறிவர் புகை நுட்பம்" (நாலடி. 282). 2. மதிநுட்பம். 3. அறிவு நுட்பம். 4. பொருள் நுட்பம். "திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்" (நன். 18). 5. கரந்துறை கோள்களுள் ஒன்று. "வட்டம், சிலை, நுட்பம், தூமம்" என்னும் கோட்கள் நான்கினும்" (சிலப். 10 : 102, உரை). 6. கால நுட்பம். (பிங்.) 7. ஒரு செய்தியைக் குறிப்பாலுணர்த்தும் பொருளணி.

> *"தெரிபுவேறு கிளவாது குறிப்பினுந் தொழிலினும்*
> *அரிதுணர் வினைத்திற நுட்ப மாகும்."*
>
> *(தண்டி. 63)*

8. நுண்ணிய ஆராய்ச்சியுரை.

நுண்—நுணங்கு=நுண்மை (தொல். உரி. 76). நுணங்கு—நுணக்கம்=1. நுண்மை (யாழ். அக.). 2. கூர்மை (அக. நி.).

நுண்—நுணு—நுணுவு. நுணுவுதல்=நுனிநாவால் தடவி யுணர்தல்.

நுணுவு—நுணுசு. நுணுசுதல்=நுனிநாவால் தடவி யுணர்தல். நுணு—நுணை. நுணைத்தல்=நுணுவுதல். (நெ. வ.) ம. நுண, க. நொணெ. நுண்—நுணி=நுனி (யாழ். அக.).

நுணித்தல் = 1. பொடியாக்குதல் (W.). 2. கூர்மை யாக்குதல் (W.). 3. நுணுகி யாராய்தல். "தெய்வ நுணித் தறங் குணித்த மேலோர்" (கம்பரா. மந்திரப். 8). நுண்—நுணுகு = நுண்மை (திவா.)

நுணுகுதல் = 1. நுட்பமாதல். "நுணுகிய நுசுப்பினார்" (சீவக. 2611). 2. மெலிதல். "தோணுணுகி" (புறம். 96). 3. கூர்மையாதல். நுணுகிய அறிவு (உ. வ.).

நுணுகு—நுணுக்கு. நுணுக்குதல் = 1. பொடி செய்தல். 2. நுண்மையாக்குதல். 3. அரைத்தல். "நுண்மணல் விராய் நுணுக்குநர்" (திருவானைக். திருநீற். 14). 4. சிதைத்தல். "வெகுளி நுணுக்கும் விறலும்" (திரிகடு. 40). 5. கூர்மை யாக்குதல் (இலக். அக.). 6. மதியை அல்லது அறிவைக் கூர்மையாக்குதல். "புலமை நுணுக்கி" (சீவக. 886). 7. சிறிதாயெழுதுதல். 8. நுட்பமாக வேலை செய்தல். 9. இன் னிசையெழுப்புதல். "அது தன்னை வீணையிலே ஏறிட்டு நுணுக்கினாள்" (திவ். திருநெடுந். 15 : 122). 10. கையைக் குலுக்குதல் (கஞ்சத்தனம் செய்தல்).

நுணுக்கு—நுணுக்கம்.

நுணுகு—நுணுங்கு = பொடி (பிங்.).

நுணுங்குதல் = (செ. குன்றிய வி.) பொடியாதல். (செ. குன்றா வி.) மெல்லப் பாடுதல். "அழகை யுடைத்தான பண்ணை நுணுங்கி" (திவ். திருநெடுந் 22 : 204).

நுளு—நுசு — நுசுப்பு = மகளிர் சிற்றிடை.

"நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை" (குறள். 1115).

ஒ. நோ. : உளு—உசு.

நுசு — நுசி — நொசி — நொசிவு = நுண்மை. (தொல். உரி. 76).

நொசிதல் = 1. நுண்மையாதல். "நொசிமருங்குல்" (தொல். சொல். 368, இளம்பூ.). 2. குறைவுறுதல். "நொசி விலாத பூசனை" (விநாயகபு. 36 : 37). 3. செயற்கு அருமை யாதல். "நோற்றுணல் வாழ்க்கை நொசி தவத்தீர்" (சிலப். 19 : 223). 4. நைதல். "நொசிந்த துகில்" (தொல். சொல். 330, உரை).

நுள் — நுறு — நூறு. நூறுதல் = 1. தூளாக்குதல். ''அரண்பல நூறி'' (அகம். 69). 2. துணித்தல். ''யானை யருஞ்சமந் ததைய நூறி'' (புறம். 93). 3. அழித்தல். ''பழம் பகை தவ நூறுவா யென'' (சீவக. 324). 4. இடித்தல். (பு. வெ. 6 : 26, உரை). 5. அறைதல். ''முலைபொலி யாக முருப்ப நூறி'' (புறம். 25). 6. நெரித்தல். ''கரும்பினைக் கண்டகர நூறி'' (நாலடி. 156).

ம. நூறுக, தெ. நூரு.

நூறு = 1. இடித்த அல்லது அரைத்த மா, பொடி, தூள். ''நூறொடு குழீஇன கூவை'' (மலைபடு. 137). 2. சுண்ணம்பு. ''கோடு சுடு நூற்றினர்'' (மதுரைக். 401). ம. நூறு, து. நூத்ர. 3. நூறு என்ற எண் (பத்துப்பத்து). ம., தெ., க. நூறு.

நூறு எண்ண முடியாத துகள்களைக் கொண்டிருத்தலால், அதன் பெயர் பத்திற்கு மேற்பட்ட முதற் பேரெண்ணைக் குறித்தது.

நூறு—நீறு. ஒ. நோ. : நூன் — நீன்—நீ. தூண்டு— தீண்டு. தீண்டா விளக்கு = தூண்டா விளக்கு.

நீறு = 1. புழுதி. ''அருவி துகளவிப்ப நீறடங்கு தெருவின்'' (சிறுபாண். 200—201). 2. சாம்பல். ''பொற் பாவாய் நீருய் நிலத்து விளியரோ'' (நாலடி. 266). 3. திரு நீறு. ''மந்திரமாவது நீறு'' (தேவா. 857 : 1). 4. நீற்றின சுண்ணும்பு (பிங்.).

ம. நீறு, தெ. நீரு.

நீறு — நீற்று. நீற்றுதல் = 1. பொடியாக்குதல். 2. சுட்ட சுண்ணம்புக்கல்லை நீரிற் கலந்து தூள் அல்லது களியாக்குதல். 3. மாழைகளை (உலோகங்களை)ச் சுட்டுச் சுண்ணமாக்குதல்.

நுறு—நுறுங்கு. நுறுங்குதல் = பொடியாதல். 2. சிதை தல். ''நுறுங்கிய யாக்கையோடு'' (விநாயகபு. 80 : 442).

நுறுங்கு = குறுநொய். ''நொய்யும் நுறுங்குங் களைந்து அரிசியமைத்தாரை'' (தொல். சொல். 1, உரை).

ம. நுறுங்ஙு.

நுறுங்கு—நறுங்கு. நறுங்குதல் = 1. நொறுங்குதல். 2. தேய்கடையாதல். 3. வளர்ச்சி குறைதல். அவன் நறுங்கிப் போய்விட்டான். (உ.வ.). க. நலுகு (g).

நறுங்கு — நறுக்கு. நறுக்குதல் = 1. நொறுக்குதல். 2. துண்டித்தல். உன்னைக் கண்டங் கண்டமாய் நறுக்கு கிறேன், பார். (உ. வ.) 3. வெட்டுதல். ''கைக் கத்திரிகை யிட்டு நறுக்கின தலையாட்டத்தினை'' (பு. வெ. 3 : 10, உரை). 4. கொட்டத்தை யடக்குதல்.

ம. நறுக்குக, தெ. நருக்கு, க. நரக்கு.

நறுக்கு=1. துண்டு. 2. ஓலைச்சீட்டு. 3. இசைக் குழல் (நாதசுர) நாக்கு.

நுறு—நொறு—நொறுங்கு. நொறுங்குதல்=1. பொடி யாதல். 2. மனம் நொறுங்குதல் போல் வருந்துதல். மனம் நொறுங்குண்டது (உ. வ.)

நொறுங்கு=1. நொய் (சூடா.). 2. தூள் ''நொறுங் காய்க் கூடி யிட்டன கொடுமுடித் துறுகற்கள்'' (சூளா. சீய. 145). 3. நுண்மை (w.).

நொறுங்கு—நொறுக்கு. நொறுக்குதல்=1. பொடியாக் குதல். 2. மென்று தின்னுதல். 3. நையப் புடைத்தல். ''வீரரை நொறுக்கி'' (திருப்பு. 574). க. நுர்கு (g).

நொறுக்கரிசி=1. குத்தும்போது நொறுங்கிய அரிசி. 2. அரைவேக்காட்டுச் சோறு.

நொறுக்கல் நெல்=1. அறுப்புக் காலத்தில் மழையாற் பதத்த நெல்.

நொறு—நொறுவை=பல்லால் நொறுக்கித் தின்னும் சிற்றுண்டி, சிற்றுண்டி.

நொறுவை—நொறுகை. நொறுவை—நொறுவல்.

நொறு நொறுத்தல்=உடைந்து நொறுங்குந் தன்மை யாதல்.

நொறு நொறெனல்=நொறுங்குதற் குறிப்பு.

நொறு நாட்டியம்=1. விறலுஞ் சுவையுந் தோன்ற நடிக்கும் நுண்வினை நடம். 2. பொருட் படுத்தத்தகாத மிகச் சிறு குற்றங்களைக் கூறுந் தன்மை. 3. துப்புரவு, சுவை, ஒழுக்கம் முதலியவற்றில் அளவிற்கு மிஞ்சிக் கவனஞ் செலுத் துதல்.

நடி—நடம்—நட்டம்···வ. நாட்ய (நாட்டியம்).

நுள்—நொள்—நொய்=1. அரிசி நொறுக்கு. (திவா.). 2. நுண்மை. 3. மென்மை. 4. நொய்ம்மை.

நொய்ம்மை=1. சிறுமை, நுண்மை. 2. மென்மை. 3. கனமின்மை. "மெய்ம்மை சீர்மை நொய்மை வடிவம்" (மணி. 27 : 254).

நொய்ய=1. நுட்பமான. "பல்கல நொய்ய மெய் யணிந்து" (சீவக. 991). 2. மென்மையான, "அனிச்சப் போதி னதிகமு நொய்ய" (கம்பரா, கோலங். 14). 3. வலி யற்ற, நொய்ய கூற்று. 4. புன்மையான. "நொய்தி னொய்ய சொல்" (கம்பரா. பாயி. 5). 5. வசையான. நொய்ய சொற் பொருநதவன். (W.).

நொள்—நோள்—நோட்கு—நோக்கு.

ஒ. நோ: கொள் — கொள்கு — கொட்கு — கொக்கு= வளைந்த கழுத்துள்ள பறவை. கொட்கு—கொட்கி—கொக்கி.

நோக்குதல்=1. கூர்ந்து பார்த்தல். "நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல்" (குறள். 1081). 2. சிறப்பாய்க் கருதுதல். "அறனோக்கி யாற்றுங் கொல் வையம்" (குறள். 189). 3. கவனித்தல். "நச்சாமை நோக்காமை நன்று" (ஏலாதி. 12). 4. கவனித்துத் திருத்துதல். "புனையிழை நோக்கியும்" (கலித். 76). 5. பாதுகாத்தல். "நோக்காது நோக்கி" (சி. போ. 1 : 4, வெண். பக். 79). 6. கவனித்துச் செய்தல். "இவற்றை மும்மைசேர் யாண்டு நோக்கு" (திரு வாலவா. 31 : 15). ம. நோக்குக.

நோக்கு=1. கூர்ந்து நோக்கிச் சிறப்புப் பொருள் காணுமாறு அமைக்கும் எழுத்துஞ் சொல்லுமான செய்யு ளுறுப்பு.

> *"மாத்திரை முதலா அடிநிலை காறும்*
> *நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே."*
>
> *(தொல். செய். 108)*

2. கருத்தோடு கூடிய பார்வை. "செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால்" (நாலடி. 298). 3. சிறப்பாகப் பார்த்தற் கேற்ற அழகு. "நோக்கு விளங்க" (மதுரைக். 13). 4. சிறந்த கருத்து. "நூலவர் நோக்கு" (திரிகடு. 29). 5. கூரிய அறிவு. "நுழைந்த நோக்கிற் கண்ணுள் வினைஞர்" (மதுரைக். 517). 6. சிறப்பாகக் கருதற் கேற்ற பெருமை. "நோக்கிழந் தனர் வானவ ரெங்களால்" (கம்பரா. கும்பக. 328). 7. சிறந்த நடை. "சொன்னோக்கும் பொருணோக்கும்" (அஷ்டப். திரு

வரங்கக். தனியன், 2). 8. வேடிக்கைக் கூத்துக்களுள் ஒன்று. (சிலப். 3 : 12, உரை). 9. நோக்குங் கண். "மலர்ந்த நோக்கின்" (பதிற்றுப். 65 : 7.)

ம. நோக்கு.

நோக்கு—நோக்கம். ம. நோக்கம்.

நோள்—நோடு. நோடுதல்=ஆய்ந்து பார்த்தல். இவ் வினை இன்று வழக்கற்றது. க. நோடு.

நோடு—நோட்டம்=1. பொன் வெள்ளிக் காசு பண ஆய்வு. 2. பொன்மணி ஆய்வு. 3. விலை மதிப்பு. ம. நோட்டம், க. நோட்ட.

நோட்டம் பார்த்தல்=1. விலைமதிப்பறிதல். 2. நிலைமை யாய்தல். 3. வேவு பார்த்தல். நோட்டம் பார்க்க வந்திருக் கிறான். (உ. வ.).

நோட்டம்—நோட்டன் =நோட்டஞ் செய்வோன்.

நோட்டக்காரன் =1. காசாயும் வண்ணக்கன். "நோட்டக் காரர் நெஞ்சடையக் கூப்பிடுவது" (பணவிடு. 182). 2. பொன் மணி ஆய்வோன்.

ம. நோட்டக்காரன், க. நோட்டகார (g).

நோடு—நாடு. நாடுதல்=1. ஆராய்தல். "நாடாது நட்டலிற் கேடில்லை" (குறள். 791). 2. தேடுதல். "தனக் குத்தாய் நாடியே சென்றாள்" (நாலடி. 15). 3. தெரிதல். "முன்னவ னிதனை நாடி" (கந்தபு. ததீசியு. 32) 4. விரும் புதல். "நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்" (பதிற்றுப். 86 : 7). 5. விரும்பிக் கிட்டுதல. இனி இங்கு நாடமாட்டான். (உ. வ.). ம. நாடுக, து. நாடுனி.

நாடு—நாட்டம்=1. சிறப்பு நோக்கு.

"நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்." (தொல். கள. 5)

2. ஆராய்ச்சி. "நன்மதி நாட்டத் தென்மனார்" (தொல். எழுத். 483). 3. அழகு. "இராசபுரம் என்னும் நாட்டமுடை நகரம்" (சீவக. 1788). 4. விருப்பம். அவனுக்குப் படிப்பில் நாட்டமில்லை. (உ. வ.). 5. நோக்கம். "வேறொரு நாட்ட மின்றி" (தாயு. பாயப்புலி. 12). 6. கண். "வயவர் தோளு நாட்டமு மிடந்துடிக்கின்றன" (கம்பரா. கரன்வதை. 71). ம. நாட்டம்.

———

# ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(முன் இதழ் சஅ0ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 3. மின்னும் பொன்னகர்

### ஜோஹான்ஸ்பர்கு வரவேற்பு

“ஜான்ஸ்மட்சு விமான நிலையம் ஜோஹான்ஸ்பர்கு பயணிகள் இறங்கலாம் நன்னாளாகுக!” விமானப் பெண் அறிவிக்கிருள். B.O.A.C. பறவை டுருரு ருருத்து இறங்கி ஓட்டப் பாதையில் ஒய்யாரமாகப் பாய்ந்து சென்று “டுணுக்” என்று நிற்கிறது. நாங்கள் ஏணி வழியே இறங்குகிரேும். அதோ அங்கே ஆயிரம் அன்பு முகங்கள் முல்லைச் சிரிப்புடன் வரவேற்கின்றன. விமான வாசலில் ஃபெலிகஸ் நடேசனும், அருணுசலமும் “வருக வருக....” என்று உள்ளே இட்டுச் செல்லு கின்றனர். நிலைய ஆணையாளர், வெள்ளையர் “We are happy to receive you on our Soil” “உங்களை எங்கள் நாட்டிற்கு மகிழ்வுடன் வரவேற்கிரேம்” என்று கைகுலுக்கி வரவேற்கின் றனர். மற்றப் பயணிகள் சுங்கச் சோதனைக்கு வரிசை நடக் கின்றனர். எனக்கு மட்டும் ஆணையாளர் தனிச் சலுகை காட்டி “சட்பட்” என்று பயணக் குறிப்புகளை எழுதி, நுழைவுச் சீட்டும் தந்தார். ஜோ-பர்கே தென்னுப்பிரிக்க வாயில் தங்கள் பெட்டி களைப் பாருங்கள்” என்று சுங்கத் தலைவர் சாமான்-வட்டத் திற்கு இட்டுச் சென்ருர் திடுக்கிட்டேன்; என் பெட்டி இல்லை. உடனே நைரோபீக்குப் பேசினுர். “ஓ, யோகி பெட்டியா” என்று அதே பெண்மணி விடை ஒலித்து “இருங்கள் பத்து நிமிஷம்” என்று நிறுத்திஞள். நான் சுங்கந் தாண்டிப் பெருங் கூடத்தில் கூடிய அன்பரிடையே சிவநாமத்துடன் புகுந்தேன். பெருமகிழ்ச்சி அலைகளில் என் உள்ளம் மிதந்து களிகூத்தாடியது. “தங்கள் வரவு தங்கவரவாகுக” என்ருர் கூட்ட முதல்வர் ஃபெலிகஸ் நடேசன். “அப்பர் வரவுபோலும்” என்ருர் அருணுசலர். டக்டக் என்று படக் கருவிகள் என் உருவைப் பிடித்தன. நான் டாக்டர் சைமன் என்ற யூதருடன் பேசிக்கொண்டிருந்தேன்.

**உடன் - படம்**

டடக்! என் வண்ணப்படம் ஒரே நொடியில் என் கைக்கு வந்துவிட்டது.

ஒரு வெள்ளைக்காரர் "நொடிப்படக் கருவி" (Instant camera)யை அழுத்தித் திறந்தார்—இன்னொரு படம்! என்ன வியப்பு; கண்காணுமுன் ஓவியம் வருகிறது! இந்த நொடிப் படக்கருவியைக் கண்டுபிடித்தவர் எட்வின் லாண்ட் என்பவர்; அவர் மகள் மூன்று வயதுச் சிறுமி அப்பா "உடனே என் படத்தைப் பிடி" என்றாளாம். எட்வின் ஆராயத் தொடங்கினார். 1943ஆம் ஆண்டு ஆராய்ச்சியிற் புகுந்தவர் 1947ஆம் ஆண்டு போலராய்டு (Poloroid) என்ற உடன்படக் கருவியைக் கண்டு பிடித்தார். 15 நொடியில் அது கருப்பு-வெளுப்புப் படம் பிடித்து, உள்ளேயே கழுவிச் செப்பனிட்டுத் தந்தது. எட்வின் மேலும் ஆய்ந்து 1955 இல் நிறப்படம் பிடித்தார். அந்தப் படக்கருவியை நான் வியப்புடன் உள்ளே திறந்து பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது சுங்க அதிகாரி வந்து "தங்கள் தோல்பெட்டி உள்ளது; நாளை மதியம் இங்கே வரும் உடனே அனுப்புகிறோம்" என்றார்.

### கனியுணவு

அன்பர் என்னை அருகேயுள்ள பெரிய விருந்து மாளிகைக்கு அழைத்துச் சென்றனர். நான் அங்கே வசதியாகக் குளித்துத் தியான வழிபாட்டை முடித்துக்கொண்டு அன்பருக்கும் பத்து மணித்துளி தியானமளித்தேன். அனைவரும் நீறுபூசி சிவநாமம் சொல்லி அமைதியுற்றதும்.. கனிகள் வந்தன...பலர் ரொட்டி யும் வெண்ணெயும் தக்காளிச் சாறும் உண்டு, ஆரஞ்சுச்சாறு குடித்தனர். நான் ஓர் ஆரஞ்சுப்பழம் பிழிந்து, அதில் வாழைக் கனித் துண்டுகளைச் சேர்த்து, தேன்அளாவி, முந்திரிப் பருப்புத் தூவி, பாலும் சேர்த்துச் சிறுகரண்டியால் சுவைத்துண்டேன். எனது கனியுணவை அனைவரும் சிறிது சுவைத்து மகிழ்ந்தனர்.

பிறகு சுற்றுலாக் குறிப்புகளைத் தந்தனர். நூறுக்குமேல் வரவேற்புகளும் சொற்பொழிவுகளும் இருந்தன. நாம் ஊர் ஊராகச் செல்வோம். முதலில் ஜோஹான்ஸ்பர்கைக் காண் போம். எனக்கென்று லாலா வல்லபதாசர் தமது வண்டியைத் தந்து தாமே அதை ஓட்டியதால் சுற்றுலா எளிதானது, இனிதானது.

### மாபெரும் பொன்னூர்

இப்போது ஜோஹான்ஸ்பர்கைச் சுற்றிப் பார்ப்போம். இதுவே தென்னாப்பிரிக்கக் குடியரசின் மாபெரும் பொன்னகர். இது டிரான்ஸ்வால் மாகாணத்தில் உள்ளது. இது கடல் மட்டத்திற்குமேல் 5,750 அடி உயரம் உள்ளது. இது மிகப்

பெரிய வணிகப் பேரூர். இது இந்தியக் கடலிலிருந்து 300 மைல் தொலைவுள்ளது. டர்பான், லாரென்சோ இரண்டும் இதன் துறைமுகங்கள். ஜான்ஸ்மட்ஸ் விமான நிலையம் உலக நிலையமாக விளங்குகிறது ; இதனின்று 15 மைல் சென்றால் வானளாவிய மாளிகைகள், மாடகூடங்கள், மணிமன்றங்கள், கடல்போல் ஒலிக்கும் ஆவணங்கள், பெரிய பெரிய வணிக நிலையங்கள் காணும். விட்வாடர் ஸ்ட்ராண்டு (Witwater strand) என்ற தங்கவயல்கள் இந்நகர் நடுவிலும் சுற்றிலும் துலங்கும். தங்கச் சுரங்கத்தில் ஏராளமான தமிழரும் பண்டுக்கள் (Bantus) என்னும் சுதேசிகளும் வேலைசெய்கிறார்கள். தங்கம் வடித்த பிறகு மீதிச் சுரங்க மணலும் தகதகவென்று பொன்னிறம் பொலியும் நடைபாதைகளெல்லாம், செங்கற் கட்டிடங்களெல்லாம் இந்த மஞ்சள் மண் கலந்து மிளிரும்.

தங்கம் மட்டுமன்று; இங்கே அணுசக்திக்கு வேண்டிய யுரேனியமும் கிடைக்கிறது. கிம்பர்லியில் விளையும் வைரக்கற்களை இங்கே செப்பனிட்டு அணிமணிகளாக்கி உலகெங்கும் விற்கின்றனர்.

**வானளாவிய மாளிகைகள்**

எங்கும் கலைமன்றங்கள், கூத்தகங்கள், படிப்பகங்கள், காட்சிக் கூடங்கள், பளபளப் பளிச்சகங்கள், இசை நாடக மாளிகைகள் அடுக்கடுக்காகக் கண்ணைக் கொஞ்சுகின்றன; காதைக் கௌவுகின்றன. கண் - செவி - விருந்து, விருந்து ! அதோ 700 அடி உயரமுள்ள ஒலிக்கோபுரத்திலிருந்து பாட்டும் பேச்சும் நமது மேசைமேல் உள்ள வானொலிப் பெட்டியில் (ரேடியோ) வந்து விருந்தளிக்கிறது.

> "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
> உலகிற்கு ஒருவனாய் நின்றாய் நீயே"

என்று நம் உள்ளம் அப்பருடன் பாடுகிறது. விட்வாடர் ஸ்ட்ராண்டு பல்கலைக்கழகத்தைச் (University of Witwater strand) சுற்றிப் பார்ப்பதே கல்விப் பயனளிக்கிறது. இங்கே அறிவும், கலையும், அழகும், தொழிலும், எழிலும் இலகிப் பொலிகின்றன. இலக்கியம், சிற்பம், மருத்துவம், நுண்கலைவளம் எல்லாம் பண்பாட்டுடன் விளங்குகின்றன. அதோ வான்ஆயகம் (Observatory) மாண்பெரும் தொலைநோக்கியுடன் விளங்குகிறது. நகருக்கு நடுவே மாபெரும் தொடர்வண்டி நிலையம் நியூயார்க்கு தொடர்வண்டி நிலையத்துடன் போட்டியிட்டுப் பொலிகிறது.

## நகரில் வெள்ளையரே

ஆனால் எங்கும் வெண் முகங்களையே பெருக்கமாகக் காண்கிறோம். 1886இல் 10,000 மக்களுடன் தொடங்கிய நகரம், பொன் சுரப்பதால் 12,24,000 மக்கட் செறிவுடன் இன்று விளங்குகிறது. இதில் 4,28,000 பேர் வெள்ளையர். நகரத்தில் வெள்ளையரே உள்ளனர். அவருள் உலாந்தா, இங்கிலாந்து, ஜர்மனி, அமெரிக்கா, யூதம், ஜப்பான், சீனம் நாட்டவரும் உள்ளனர். இவர்கள் வெண்ணிறப் பகுதியில் அடுக்கு மாளிகை அலங்காரக் கூடங்களில் ஆடல்பாடல் அமளியில் வாழ்கின்றனர். இவர் மூளையும், இந்தியர் சூலுக்கர் உழைப்பும் சேர்ந்து இந்நகரைப் பொன்னகராக்கின. சீனரும், யாப்பரும் வெண்ணுரிமை பெற்று - வெண்பகுதியில் வசிக்கின்றனர்.

## நாகரிக நகரம்

நகர அமைப்பே நாகரிகச் சிகரமாக விளங்குகிறது. இவ்வளவு வழுவழுப்பான நெடுஞ்சாலைகளை வாஷிங்டன், லண்டன், பாரிஸ், மாஸ்கோ நகர்களிலேதான் காணலாம். 1911இல் நகரில் பாதி வெள்ளையர்; 1972இல் 88% வெள்ளையர் மற்றவர் நகருக்கு வெளியே புறஞ்சேரியிலேதான் குழுக்குழுவாக வாழ்கிறார்கள். அவர்கள் கறுப்பர், வெள்ளையரல்லார் (Non-Whites) மக்கட் பெருக்கத்திற்கு அடுத்தபடி மோட்டார் (உந்துவண்டி) பெருக்கமே இங்கே அதிகம்.

## பொன்னகர் - மின்னகம்

உந்துவண்டித் தொழிற்சாலைகள், பிளாஸ்டிக் தொழிற்சாலைகள், இரும்பு, ஈயம், தாமிரம் முதலிய உலோகத் தொழிற்சாலைகள், நெசவுச் சாலைகள் எல்லாம் யந்திரங்களின் கூட்டுப் பண்ணைகளே - கட்டிடங்கள் வானளாவி ஓங்கி வளர்கின்றன.

மின்சாரம் உயிரோட்டம்போலப் பாய்ந்துகொண்டிருக்கிறது. 9,44,000 கிலோவாட் மின்சக்தி பொழியும் மின்னகம் அற்புதமானது. அதில் ஏரோ-டைப்-ஜெட்-எஞ்சின் (Aero Type Jet Engine) காற்றினும் கடிய வேகத்தில் மின்சக்தி பொழிவதைக் கண்டு வியந்தேன். சிறப்பான கிறிஸ்து பண்டிகை நாட்களில் ஊரில் பல நிற மின்னணியழகு கண்ணுக்குக் கவின் விருந்தாகும். பகலுக்கும் இரவுக்கும் வேறுபாடில்லை— எப்போதும் ஒளிப்பிழம்பாயிருக்கிறது பொன்வயலூர்.

**அலுவலகங்கள்**

வானுயர் அடுக்கு மாளிகைகளில் (Sky scrapers) அலுவலகங்கள் உள்ளன; டச்சுக்காரரும், யூதரும், செருமானியரும், ஆங்கிலேயரும், சீனரும், சப்பானியரும் அங்கே வசதியாக வாழுகின்றனர். இவர்களுக்கு உணவாக்கிப் பரிமாறி உடை வெளுத்து, கூட்டிச் சுத்தம் செய்து வேண்டிய அலுவல்களைச் செய்பவர்களெல்லாம் நாட்டுக்குரிய பண்டுக்களே - ஃசூலுக்களே.

**பண்டுக்கள் லெமூரியரே**

பண்டுக்கள் ஃசூலு (Zulu) மொழியினர்; அவர்களை ஃசூலுக்கள் என்றும் அழைப்பர். அவருட் பல பிரிவுகள் உண்டு. இவர்கள் பழைய திராவிட இனம் எனலாம். கடலுண்ட லெமூரியாவில் வாழ்ந்தவர் எனலாம். தமிழகமும் மடகாஸ்கரும், தென்னுப்பிரிக்காவும் ஒருகாலம் ஒன்ருயிருந்திருக்கலாம். தென்னிந்தியப் பழங்குடியினர் மரபே தென்னுப்பிரிக்காவிலும் வாழுகின்றனர் எனத் தெரிகிறது. பண்டுக்கள் உதடு தடித்தவர்; உடல் பெருத்தவர்; பின்புறம் பெருத்துத் தடித்தவர்; அவர் தலையில் சுருட்டை மயிர் நீளுவதில்லை. சிலர் பொய் மயிர் அணிவர்; அல்லது கறுத்த முண்டாசு கட்டுவர். எல்லாரும் பெரும்பாலும் ஆங்கிலம் அறிவர்; எனினும் சூலு மொழியில் பேசினுல் ஹஹஹஹ என்று கடகடச் சிரிப்புடன் கைகுலுக்கி நட்பாடுவர். இவர்கள் மொழியிற் சில சொற்களைக் கற்றுக்கொண்டு முன் சென்றேன்.

**குமரிக்கண்டப் பழங்குடி மக்களுடன்**

எந்த நாடு சென்ருலும் அதன் பழங்குடிகளுடன் முதலில் மனமார உறவுகொள்வது எனது வழக்கம். மானிட பகுப்பு (Ethnological classification) பலவகை. முகம், உதடு, நிறம், தலைமயிர் இவற்றைக்கொண்டு எதியோப்பியர், மங்கோலியர், ஆரியர், திராவிடர், செமிதியர் என்று ஐந்து வகையாக மனிதரைப் பாகுபடுத்தினர் மரபிலக்கணர். அவருள் திராவிடர் தென்னிந்தியர்; ஒருகாலம் இவர்கள் திபேத்து வரையிலும் பரவியிருந்தவர்; இந்துக்கடல் ஒருகாலம் தரை நிறைந்திருந்தது. அதில் குமரிக்கண்டம் பரந்து விரிந்து பஃறுளியாறும் பன்மலையடுக்கமும் கொண்டிருந்தது. இம்மரபினரே ஆப்பிரிக்காவிலும் இருந்தனர். பிற்காலம் நமது தமிழ்நாட்டு உழைப்பாளிகளே ஒப்பந்தக் கூலிகளாகச் சென்று மூரியம் (மோரிசஸ்), நேடால், டிரான்ஸ்வால், கிம்பர்லி, கேப்டவுன் முதலிய இடங்

களில் பாடுபட்டு நாட்டைப் பசுவளமும், பொன் மணிவளமும் குலுங்கச் செய்தனர். நாட்டிற்குரிய பண்டுக்கள் (சூலுக்கள்) நகருக்கு வெளியே குழுக்குழுவாக வட்ட வீடுகட்டி வாழ் கிருர்கள். இவர்களே இந்தியருடன் இன்றும் நாடுசெழிக்கப் பாடுபடுகிருர்கள்.

**பண்டுக்கள் (Bantus)**

சுவெடோ (Soweto) என்ற ஊரில் 65,958 சிறுமனைகளில் 6,00,000 பண்டுக்கள் வசிக்கிருர்கள். இவர்கள் பகலில் நகருக்கு வந்து பாடுபட்டுழைத்து, இரவில் தங்கள் ஊர்களுக்குத் திரும்பி விடுவார்கள். இவர்கள் உண்ண இருக்க நகரிலும் பெரிய ஓட்டல்கள் உண்டு. 17,755 உழைப்பாளிகளுக்கு அத்தகைய ஓட்டல்கள் ஜோ-நகரில் அரசினர் அமைத்துள்ளனர். இவர்கள் தங்கும் அறைகளுக்கு மாத வாடகை 50 முதல் 80 ரூபாய் வரையிலும் உண்டு. இவர்களுக்கு மருத்துவ வசதிகள் ஐந்துரூபாவுக்குக் கிடைக்கும். இவர்களிற் பெரும்பாலோர் கிறிஸ்து மதத்தைத் தழுவினர். இவர்களுக்கென்று 180 சர்ச்சுகள் உள்ளன. ஐரோப்பிய இசைபோல இவர்கள் மெட்டமைத்து வணக்கம் பாடுவர். இவர்கள் படிக்க நல்ல பள்ளிக்கூடங்கள் தனியே உண்டு; அங்கே சூலு, ஆங்கிலம், ஆஃப்ரிகான்ஸ் ஆகிய மும்மொழிகளும் கற்கலாம். காலத்திற்கேற்ற கல்வி முறை வழங்குகிறது. இவர்கள் விளையாடப் பல விளையாட்டகங்கள் உண்டு. இவர்கள் நீந்தி விளையாடக் குளங்கள் கட்டியிருக்கிருர்கள். எங்கும் அழகின் சொக்கு, மலர்ப்பொதும்பரின் பல நிறப் பொலிவும் அங்கே வனப்பான உடைகளணிந்து இருபாலாரும் மயிலென, மானென, அன்னமென உலாவும் காட்சியைக் கண்டு தங்க வயற்புறம் நடக்கிருேம். மஞ்சள் மண் குவை காண்கிறது. இந்தியரும் பண்டுக்களும் இடுப்பொடிய முப்பதினுயிரம் அடிக் கீழிருந்து பொன்னுக்குழைத்து வருகிருர்கள். தங்கச் சுரங்கத்தில் வேலை செய்வது மிகக்கடினம். இங்கே கோலார் தங்கவயலைப் பார்த்தவர்களுக்குத் தெரியும்.

எங்கள் உந்துவண்டி சுரங்கத்தருகே நின்றது; ராண்டு வயலைச் சுற்றிப்பார்த்து ஒரு மஞ்சள் மண்மேட்டில் அமர்ந்தோம். பண்டுக்கள் எம்மைச் சூழ்ந்துகொண்டனர். அவர்கள் ஆங்கிலம் அறிவர். எனினும் சில ஜூலு சொற்களால் அவர்களை மகிழ்வித்தேன். அவர்கள் ஜூலு பேச்சை ஒரு நண்பர் மொழிபெயர்த்தார்;

நான் பயன்படுத்திய ஜுலு சொற்கள் :—

1. ஹம்பா (Humba) Travel - பயணம்
2. பொங்கா (Bonga) Thanks - மிகநன்றி
3. குமுலா (Kumula) Unite - குழுவுதல்
4. அஃஜீஸா (Azisa) Respect - மரியாதை
5. இ-ஜுலு (I-Zulu) Sky - வானம்
6. ஊகு (Uku) Joy - மகிழ்ச்சி ஊக்கம்
7. லங்கில (Lungle) Good - நல்லது
8. பூதா (Bhuta) Gather - கூடுமின்
9. தோலா (Thola) Get - அடை
10. இம்பாலி (Imbole) Flower - பூ
11. அம்ஸின்டோ (Um-Sindo) Dance - ஆட்டம்
12. ஊஃஜானி (Wozani) Come - வருக

சூலு என்றாலும் பண்டு என்றாலும் ஒன்றே. அவர்களை நான் பண்டர் (பழங்குடிமக்கள்) என்றே அழைத்தேன். நான் ஆங்கிலத்தில் பாடினேன்.

Earth is one; the breath is one
The sky above is one
Humanity in soul is one
The goal of life is one
Prosper all! Prosper all
Conscious of the one in all!

*உலகொன்றே; உயிர்ப்பொன்றே*
*உயர்வானம் ஒன்றே*
*ஆன்மாவில் மாந்தர் ஒன்றே*
*ஆருயிர் முடிபும் ஒன்றே*
*அனைவருள்ளும் ஒன்றை அறிந்தே*
*அனைவரும் வாழியவே*
*அனைவரும் வாழியவே.*

பண்டுக்கள்: (இப்படி அப்படி கைகால் ஆட்டி) பாட்டு நன்று! நீங்கள் இந்திய யோகி! உங்களைக் கண்டு மகிழ்ந்தோம்.

நான்: நான் உங்கள் தொண்டன் உங்களைக் கண்டு பெரு மகிழ்ச்சியடைந்தேன். ஆப்பிரிக்க நாட்டில் அடி வைத்

தரும் பழங்குடிகளான பண்டரைக் கண்டேன். நன்றா யிருக்கிறீர்களா ?

அவர்கள் : உழைக்கிறோம் ; உண்கிறோம் ; உவக்கிறோம். உயிர்க்கிறோம் ; உறங்குவோம் ; உலாவுவோம்.

நான் : இது போதுமா ? உண்பதும் உறங்குவதுமே வாழ்வா ? உங்கள் சமயம் ?

சிலர் : கிறிஸ்துவர், கத்தோலிக்கர்.

சிலர் : நாங்கள் சூலுக்கள்—எங்கள் நிலம் சூலு நாடு ; சூலு என்றால் வான் ; வானை நோக்கி வணங்குவோம்.

நான் : ஆம் எல்லாரும் வானை நோக்கியே வாழவேண்டும். வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகிய ஒன்றே கடவுள். கடவுள் எல்லார் உள்ளத் திலும் நடமாடுகிறார்—இமைப்பொழுதும் நம் நெஞ்சில் நீங்காது துடிப்பது அவர் உணர்வே. நெஞ்சைத் தொட்டுப் பாருங்கள்.

அவர் : ஆம், சரியாகச் சொன்னீர். எல்லாருக்கும் இங்கே உயிர் துடிக்கிறது.

நான் : எல்லாரும் இதயத்துடிப்பில் ஒன்றே—நாடு, நிறம், இனம், மதம், பேச்சு நடை பல ; உயிர்த்துடிப்பு ஒன்றே.

*ஒன்றே வானம் ஒன்றே பூமி*
*ஒன்றே உயிரீட்டம்*

அவர் : உண்மை, உண்மை. பிறகு உலகிலேன் நிற வேற்றுமை, நிலவேற்றுமை, பலவேற்றுமை.

நான் : இவை மனவேறுபாடு, கறுப்புப் பசு வெள்ளைப்பால் கறப்பதில்லையா ? கறுப்புத்தோல் போர்த்த ஆன்மாவும், வெளுப்புத்தோல் போர்த்த ஆன்மாவும் ஒன்றுதான். இரவு கறுப்பு, பகல் வெளுப்பு ; கண்மணி கறுப்பு, சுற்றிலும் வெளுப்பு; குயில் கறுப்பு, குரல் கறுப்பா ? உங்கள் உடல் கறுப்பு, உழைப்பும் கறுப்பா ? கறுப்பான மேகமே மழை பொழிகிறது.

இவ்வாறே நான் பேசியதைக் கேட்ட பண்டர் மகிழ்ச்சி யடைந்து—''எல்லாரும் ஒரு குலமாக வாழும் நல்ல நாள் வரட்டும்'' என்றனர்.

*ஒரே கடவுள் ஒரே உலகம்*
*ஒரே ஆன்ம நேயர்நாம்*
*ஒரே வானக் குடைநிழலில்*
*ஒரே குலமாய் வாழுவோம்.*

என்ற பாட்டு ஆங்கிலத்துடன் இணைந்தது. இந்தப் பாட்டு எங்கும் பரவி ஒலித்தது. இதனால் சூலருக்கும், பிறருக்கும் என்மேல் அன்பு பிறந்தது. அவரவர் நிலையில் அவரவரை வைத்து யாருக்கும் தீங்கில்லாமல் எல்லாரும் உழைத்துப் பிழைத்து, ஒன்றாக வாழவேண்டும் என்பதே மனிதப் பண்பாடு; இதுவே வள்ளுவர் உள்ளம். இதை நான் விளக்கியபோது எல்லா மக்களும் மகிழ்ந்தனர்.

சூலம் என்றால் சிவபெருமான் தாங்கும் சூலாயுதம். சிவன் என்றால் நமது சீவனை உள்ளிருந்து இயக்கும் இறைவன். அவன் எல்லாருள்ளும் ஒன்று. நீங்களெல்லாம் அவன் கோயில், நடமாடும் கோயில் என்று பழங்குடி மக்களான சூலுக்கள் உணரச் செய்தது எனது முதல் வெற்றி—இனி முன் செல்வோம்.

(தொடரும்)

---

## நடமாடுங் கோயில்

*"படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்*
*நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா*
*நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்*
*படமாடக் கோயிற் பகவற்க தாமே"*

*—திருமந்திரம், 1821*

# கருநெல்லிக் கனி

[புலவர் பொ. முனியப்பன்]

**நுழைவாயில்**

நம் அன்னைத் தமிழில் - அமிழ்தத் தமிழில், 'அறிவியலை ஆக்குவதென்பது ஆகும் செயலா ?' என அறிவிழந்து கூறி வந்தார் சிலர். இன்று அந்நிலை மாறி, அறிவியலை அருமைத் தமிழில் ஆக்குகின்றபோது, 'அருஞ்சொற்களையெல்லாம் அவ்வாறே கொள்ளவேண்டும். தனித் தமிழில் ஆக்குதல் தகாது' எனத் தடை கொடுக்கின்றனர் தண்ணுர் தமிழின் நண்ணுப் பகைவர்கள். கொஞ்சுதமிழ்ச் சொல்வளம் எம் மொழியையும் விஞ்சிவிடும் என்பதைக் கண்டஞ்சியே, தன் நெஞ்சத்தின் வஞ்சத்தை, இவ்வாறு நஞ்சுதோய்த்துப் பைந்தமிழைப் பஞ்செனஊதிவிடப் பார்ப்பார் சிலர்.

**கழகமும் கன்னித்தமிழும்**

இத்தகைய வஞ்ச நெஞ்சினரின் வானளாவிய கோட்டையெல்லாம் இடிந்து பொடிப்பொடியாய் இல்லாமற் போவதற்கு ஏற்ற பணிகளைச் 'சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்' ஆற்றி வருவது யாவர்க்கும் அகமகிழ்வைத் தரும். இதற்கு எடுத்துக் காட்டாய் எத்துணையோ நூல்களைக் கூறலாம். எனினும், இரண்டினைக் ஈங்குக் குறிப்பிடுகின்றேன்.

நுண்மாண் நுழைபுலம் மிக்க அறிவியற் புலவர் உயர்திரு. பி. எல். சாமி அவர்களால் எழுதப்பட்டு, கழகம் வெளியிட்டுள்ள, 'சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம்,' 'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்' என்னும் இரு நூல்களைக் கற்பார் கன்னித் தமிழின் பொற்பார் பெருமையைப் புரிந்து கொள்வர். அம்மட்டோ, தமிழையும், கழக(சங்க) இலக்கியங்களையும் கருத்துடன் கற்ருல், இன்றைய அறிவியலில் எழும் ஐயத்தையும், குழப்பத்தையும், மயக்கத்தையும் மாற்றமுடியும் என்பதை மலைமேல் எழுத்தாய் மாண்புடன் நிறுவுகின்றன இந் நூல்கள்.

**கருநெல்லிக் கனி**

உள்ளதை உள்ளவாறு மட்டுமின்றி, உண்மைகளையெல்லாம் ஆய்ந்து சுவையுற உரைக்கின்ற ஒப்பில்லாக் கழகப்

புலவர்கள் கருநெல்லிக் கனி பற்றிக் கூறிய கருத்தைப் புற நானூற்றில் படித்திருக்கின்றோம். அதனைச் ‘செடிகொடி விளக்க’த்திலுங் கண்டேன்.

அதில், ‘‘அதிகமான் ஔவைக்குத் தான் அரிதாகப் பெற்ற சாவா மருந்தான கருநெல்லிப் பழத்தைக் கொடுத்த கதையைப் புறநானூறும், சிறுபாணாற்றுப்படையும் கூறு கின்றன. இயற்கையில் அத்தகைய குணமுடைய கருநெல்லிக் கனி இருப்பதாகத் தெரியவில்லை’’ (பக் : 192) எனக் குறிப்பிட் டுள்ளார்.

இங்கு, கருநெல்லிக் கனி பற்றிய நிகழ்ச்சிகளைக் கதை என்று கருதுகின்றார். உண்மையில் ‘கதை’ அன்று அது. வரலாறே. அதியமான் ஔவைக்குக் கருநெல்லிக் கனியைக் கொடுத்தது முக்காலும் உண்மையே.

**கருநெல்லிக் கனி உண்டு**

அடுத்து, ‘இயற்கையில் கருநெல்லிக் கனி இல்லை’ எனக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். ஆம்! உண்மைதான். ஆனாலும் உண்டு! எப்படியெனின், இயற்கையில் தானாகவே கருநெல்லி மரம் தோன்றுவது இல்லையேயன்றி, செயற்கை முறையில் கருநெல்லி மரத்தைச் சித்தர்கள் உண்டாக்கினார்கள். முறையான சித்த மருத்துவப் பயிற்சி உடையவர்களும், சித்தர் நூல்களைப் பயின்றவர்களும் இதனை நன்கு உணர்வார்கள். இனி, சித்தர்கள் கருநெல்லிக் கனியை எவ்வாறு தோற்று வித்தனர் என்பதைக் காண்போம்.

**கருநெல்லியை ஆக்கும் முறை**

இன்றைய அறிவியலின் திறத்தால் மிகுபயன் நல்கும் செடி, கொடி, பயிர்களை எவ்வாறு ஆக்குகின்றார்களோ, இதனை அன்றே சித்தர்கள் செய்தனர். நெல்லி, கருநெல்லியாய் மாறி மிகுபயன் கொடுக்க அவர்கள் கையாண்ட முறையாவது:

சேங்கொட்டை அல்லது சேத்தான் கொட்டை எனப்படும் காய்களை ஓர் அடி நீள, அகல ஆழம் உள்ள குழியில் பரப்பி அதன்மேல் மண்போட்டு, இயற்கையாக உள்ள நெல்லி விதையை நட்டால் அது கரு நெல்லியாகவே வளரும். மரமும் பட்டையும், கிளையும் கவரும், ஈர்க்கும் இலையும், மொட்டும் பூவும், காயும் கனியும் ஆகிய யாவுமே கருமையாக வளரும். இதனை இன்றும் யார் வேண்டுமாயினும் செய்து பார்க்கலாம்.

நெல்லி மட்டுமன்று, வேறு எவ்வகைச் செடி, கொடி, மரங்களை யும் இவ்வாறு ஆக்கலாம்.

பெருமரங்களை இவ்வாறு ஆக்கும்போது சேங்கொட்டை களை 12 அடி நீள, அகல, ஆழத்தில் பரப்பி உண்டாக்க வேண்டும். இவ்வாறன்றி, இயற்கையிலேயே கருமைபெற்று விளங்கும் செடி, கொடி, மரங்களும் உண்டு. எடுத்துக் காட்டாக: ஊமத்தைச் செடியில் வெள்ளூமத்தையும் உண்டு. கருவூமத்தையும் உண்டு. இதில், கருவூமத்தையே அதனுல் விளையும் பயனில் மிகுபயன் நல்குவது.

## கருநெல்லிக் கனி சாவா மருந்தா?

ஆம்! உலகத்தில் வாழும் மக்கள் யாவருக்கும் நிறைவான வாழ்நாள் என்பது 120 ஆண்டுகள். இந்த நூற்றிருபது ஆண்டுகளும் நாம் நலத்தோடு வாழும் ஆற்றலைத் தந்து, நம்மை நிறைவாழ்வு வாழச் செய்யும் சாவா மருந்தே கரு நெல்லிக் கனி.

ஆயின், இக்காலத்தில் குளம்பி (காப்பி) முதலிய நச்சுக் குடிநீர்களை அருந்தாதிருப்பவர்க்கே கருநெல்லிக் கனி தன் பயனைத் தரும். குளம்பி முதலிய நச்சுக் குடிநீர்கள் கனியின் பயனைக் கெடுப்பதோடு, உடலுக்கும் கேடு பயப்பதால் நாம் முழுப்பயனும் பெறமுடியாது போகும். இக் கருநெல்லிக் கனி யில் ஒன்று உண்டாலே போதுமா? என வினவின் -- அது ஒவ்வொருவரின் உடல்நிலைக்குத் தக்கபடி வேறுபடும் என அறிக.

## சாவா மருந்தின் சால்பு

கருநெல்லிக் கனிக்கு இவ்வாற்றல் தோற்றியது எது? அதன் அடியில் பரப்பிய சேங்கொட்டையே. சேங்கொட்டை எத்தகைத்து? சேங்கொட்டை என்பது முற்றிலும் நஞ்சுத் தன்மை உடையது. (சேங்கொட்டை என்றாலும் சேத்தான் கொட்டை என்றாலும் ஒன்றே. தேத்தான் கொட்டை என ஒன்று உள்ளது. இது முற்றிலும் நஞ்சற்றது. கலங்கிய நீரைத் தெளியவைக்கும் தன்மை உடையது.) சேங்கொட்டை மலரின் மணம் உடலை வீக்கமடையச் செய்யும். இம்மரம் மலர்ந் திருக்கும் காலத்தில், இதனடியில் ஓர் இரவு உறங்குபவன் மறுநாள் உயிரோடு இருக்கமாட்டான். அத்தகு கொடு நஞ்சுடையது இது. இத்தகு நஞ்சில் தோய்ந்து வளருவதால்

தான் கருநெல்லிக் கனி சாவா மருந்தின் சால்பைப் பெறு கின்றது.

உலகில் எம்மருத்துவத்திற்கும் இல்லாது, தமிழ் மருத் துவத்திற்கே உரிய தனிச் சிறப்பு யாதெனின்; நஞ்சுப் பொருள் களைத் தூய்மை செய்து, நஞ்சின் ஆற்றலைக் குறைத்து மருந்தாக்குதலே. இச் சேங்கொட்டை பற்றிய சிறந்த பழமொழி ஒன்றும் உண்டு. "கொட்டைக்கும் பட்டைக்கும் தீராத நோய், கட்டையில் போனாலும் தீராது" என்பதேயது. இதில், கொட்டை என்பது சேங்கொட்டையையும், பட்டை என்பது பரங்கிப்பட்டையையும் குறிக்கும். நஞ்சுத் தன்மை யுடைய இவ்விரண்டிற்கும் தீராத பிணிகள், பிணமான பின்னும் அவ்வுடலைவிட்டு அப்பிணிகள் போகாது என்பதே இப்பழமொழி யின் பொருள். இத்தகு கடுநஞ்சும், பேராற்றலும் மிக்க சேங்கொட்டையால் வளருவது சாவா மருந்தாவதில் வியப் பென்ன ?

**முடிவிடம்**

அக்காலத்தில் இத்தகு செய்திகள் யாவும் சித்தர்களுக்கும், மருத்துவர்களுக்குமன்றி, மற்றவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லா திருந்ததாலும்; எல்லோருக்கும் எல்லாவற்றையும் தெரிவிக்கக் கூடாது என்ற கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்ததாலுமே, அதியமானுக்குக் கருநெல்லிக் கனி அரிதாகக் கிடைத்தது. கருநெல்லிக் கனியின் பயனை அதியமான் அறிந்திருந்ததால் அதனை ஔவைக்கு ஈந்து அருந்தமிழ் வளர்த்தான். எனவே, கருநெல்லிக் கனி உண்டு என்பதும், கழகப் புலவர்கள் அறிவியல் திறமிகு நுண்மாண் நுழைபுலம் மிக்கவர்கள் என்பதும், சிறிதும் ஐயத்திற் கிடமில்லாத அரும்பெரும் உண்மையாகும்.

---

## மருந்து

*"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின்"*

*—திருக்குறள் : 942*

# இலண்டனில் தமிழ்க் கல்வி

**[ஷீலா லக்ஷ்மண்]**

## அறிமுகக் குறிப்பு

*[திருமதி ஷீலா லக்ஷ்மண் இலக்கியங்களிலும் மொழிக் கல்வியிலும் ஆர்வமுள்ளவர். இவருடைய தாய்மொழி ஆங்கிலம். ஆங்கில இலக்கியத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்து அதில் சிறப்புத் தகுதியோடு பி.ஏ., பட்டம் பெற்ற பிறகு இவர் தமிழ்மொழியிலும் தமிழிலக்கியங்களிலும் தமக்குள்ள ஆர்வத்தினுல் இப்போது தமிழ் பி.ஏ., படித்து வருகிருர். இவருக்கு ஓரளவு ரஷ்யன், பிரஞ்சு ஆகிய மொழிகளும் தெரியும். இப்போது சமஸ்கிருத மொழியையும் கற்று வருகிருர்.*

*நல்ல இலக்கிய அறிவும் மொழியறிவும் பெற்றுள்ள இந்த ஆங்கிலேயப் பெண்மணியைத் தமிழ் மாணவியாகப் பெற்றிருப்பது தமிழ்த் தாய்க்கு ஒரு இனிய மகிழ்ச்சியான செய்தி. இவரது எதிர்காலத் தமிழ்ப்பணிகள் தமிழுக்கும் தமிழர்கட்கும் நல்விருந்தாக அமையும். இவர் தமிழில் இலக்கிய வழக்கு, பேச்சு வழக்கு ஆகிய இருவகை வழக்குகளிலும் அக்கறை காட்டிப் பயின்று வருகிருர்.*

*திருமதி ஷீலாவின் கணவர் ஒரு தமிழர் என்பதும் அவர் இளமையிலிருந்தே வெளிநாடுகளில் வாழ்ந்து வருவதால் தமிழ்ப் பேச்சுப் பழக்கம் இல்லை என்பதும் அவர் ஒருவகையில் மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கட்கு உறவுள்ளவர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்க செய்திகள்.*

*திருமதி ஷீலா அவர்கள் இலண்டனில் தமிழ்க்கல்வி பெற்று வருபவர். அவரே 'இலண்டனில் தமிழ்க் கல்வி'பற்றித் தமிழர்கட்குத் தெரிவிக்கிருர் என்ன சொல்கிருர் என்று பாருங்கள். —(பொற்கோ)]*

இங்கிலாந்தில், இலண்டன் பல்கலைக்கழகத்தில் உள்ள கீழைநாட்டு ஆப்பிரிக்கக் கலைக்கழகத்தில் (School of Oriental African Studies) மட்டும் தமிழ் படிக்க முடியும். இங்கே, முதலில் அறவே தமிழ் தெரியாத மாணவர்கள்கூட நான்கு ஆண்டுகளில் படித்து, தமிழ் மொழியில் பட்டம் பெறமுடியும். முதலாம் ஆண்டில், அவர்கள் தமிழில் அடிப்படை இலக்கண விதிகளைக் கற்கிருர்கள்; இப்பொழுது எளிய தமிழ் உரைநடை மட்டும் படிக்கலாம்.

அதே நேரத்தில், மாணவர்கள் கொஞ்சம் உரையாடல் தமிழ் கற்க வேண்டும். அதற்கு, அவர்கள் மொழிபயிற்ருய்வுக் கூடத்தைப் (Language Laboratory) பயன்படுத்துகிருர்கள். ஆசிரியர் டாக்டர் பொன். கோதண்டராமன் அவர்கள் நாடா

ஒலிப்பதிவுக் கருவியில் (Tape recorder) பல ஒலிப்பதிவுப் பாடங்களைத் தயார் செய்திருக்கிருர். இந்தப் பாடங்களில், அன்றாட வாழ்க்கையின் சாதாரண நிகழ்ச்சியைப் பற்றி, இரண்டு பேர் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்கலாம். இவ்வாறு உதாரணமாக, சிற்றுண்டிச்சாலையில் உரையாடல், கடைகளில் பொருள்கள் வாங்குவது முதலியவைபற்றி மாணவர்கள் கற்கலாம்.

இரண்டாம் ஆண்டில், மாணவர்கள் தமிழ் இலக்கியம் படிக்கத் தொடங்குகிருர்கள். தமிழுலகுக்கு நன்கு அறிமுகமான டாக்டர் ஜே. ஆர். மார் அவர்கள் இந்தப் பாடத்தைக் கற்றுக் கொடுக்கிருர். இறுதித் தேர்வுக்கு, கலித்தொகையில் நெய்தற்கலியில் உள்ள சில செய்யுட்களும் (நச்சினூர்க்கினியருடைய உரையோடு) குறுந்தொகையில் உள்ள சில செய்யுட்களும், பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தும் (பதிகத்தோடு) நெடுநல்வாடையும், சிலப்பதிகாரத்தில் உள்ள கடலாடு காதை, கானல்வரி ஆகிய இரண்டு காதைகளும், பவணந்தியாருடைய நன்னூலும் (உரையோடு) திருஞானசம்பந்தருடைய பாடல்களில் சிலவும், கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டத்தின் மூன்ரும் படலமும், கலிங்கத்துப்பரணியில் உள்ள சில செய்யுட்களும், அகிலனுடைய நெஞ்சினலைகளும், சுப்பிரமணிய பாரதியாருடைய கண்ணன் பாட்டும், மு. வரதராசனருடைய இளங்கோவும், மாணவர்கள் படிக்கவேண்டிய பகுதிகள்.

சந்தேகத்துக்கு இடமில்லாமல், இந்த இலக்கியத்தின் தெரிவு குறைவாகவே தோன்றுகிறது. ஆனல், கீ. ஆ. கலைக் கழகத்தில் தமிழ் படிக்கிற மாணவர்கள் இந்திய வரலாறும் இன்னெரு மொழியும் படிக்க வேண்டும். இந்த மொழி சமஸ்கிருதமாகவோ, பாலியாகவோ, சிங்களமாகவோ இருக்க வேண்டும். அதோடுகூட, சங்கீதத்தை விரும்புகிற மாணவர்கள் கருநாடக சங்கீதம் படிக்கலாம். தமிழ் வரலாற்றிலக்கணம் படிக்க விரும்புகிற மாணவர்கள் அதையும் படிக்கலாம். இப்பொழுது நான் மட்டுந்தான் தமிழ்ப் பட்டப் படிப்பில் படித்துக்கொண்டிருக்கிறேன்.

ஆனல், ஆராய்ச்சிப் படிப்புக்குத் தமிழர்களேகூட இலண்டனுக்கு வருகிருர்கள். இலங்கையிலிருந்து வந்துள்ள திரு. ஆ. கந்தையா சைவ இலக்கியங்களில் ஆராய்ச்சி செய்கிருர். கீ. ஆ. கலைக்கழகத்தில் கற்றுக்கொடுக்கிற டாக்டர் பொன். கோதண்டராமன் அவர்களும் யாப்பியலில் சிலகாலம் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். பிரிட்டிஷ் மியூசியத்திலும்

இந்தியா ஆபீஸ் நூலகத்திலும் ஏராளமான தமிழ்ப் புத்தகங்களும் ஓலைகளும் இருக்கின்றன. தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்கு இவை மிகவும் பயன்படுகின்றன. அவர்கள் தம் நூல்களை ஆங்கிலத்தில் எழுதுவதால், தமிழ் அறியாத மக்கட்கும் தமிழ்க் கல்வியில் கவர்ச்சி ஏற்படலாம்.

கடந்த ஆண்டுகளில் கீ. ஆ. கலைக்கழகத்தில் எழுதிய ஆய்வு நூல்களுக்குள், இவை சிறப்பாகப் படிக்க வேண்டியவை என்று நான் நினைக்கிறேன். (1) (1950-51) எஸ். வித்தியானந்தனுடைய பத்துப்பாட்டு - வரலாற்றியல், சமுதாயவியல், மொழியியல் இவைபற்றிய ஆய்வு. (2) (1952-53) எஸ். டேவிட் என்பாருடைய தொல்காப்பிய ஆராய்ச்சி (குறிப்பாக எழுத்ததிகாரத்தைப்பற்றி) (3) (1957-58) ஜே. ஆர் மாருடைய எட்டுத்தொகை (குறிப்பாகப் புறநானூற்றையும் பதிற்றுப்பத்தையும் பற்றிய ஆராய்ச்சி) (4) (1964-65) ஆர். சுப்பையாவுடைய பேச்சுத் தமிழ்ச் சொற்றொடரியல் (5) (1966-67) டி. கந்தையாவுடைய இலங்கைத் தமிழில் வினைச்சொல்லின் தொடரியல் இலக்கணம். இவ்வாறு, தமிழ்க் கல்வியில் பல பகுதியில் ஆராய்ச்சி செய்யப்படுகிறது.

கீ. ஆ. கலைக்கழகத்தில் நடக்கிற தமிழ்ப் பணிகளைத் தவிர, இலண்டனில் வேறு சில வழியிலும் தமிழ்ப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு மாதமும், இலண்டன் முரசு என்ற தமிழ்ப் பத்திரிகை (பொறுப்பாசிரியர் ச. ம. சதானந்தன் B.SC.) வெளியிடப்படுகிறது. அதில், இங்கிலாந்தில் இருக்கிற தமிழர்கள் தாய்நாடுகளின் செய்திகள், மேற்கு நாடுகளின் செய்திகள், தமிழ்க் கலை, செந்தமிழ் முதலியவை பற்றிப் படிக்கலாம்.

இலண்டன் தமிழ்ச் சங்கம் பல தமிழ் விழாக்களைக் கொண்டாட ஏற்பாடு செய்கிறது. இலங்கையிலிருந்து வந்துள்ள திருமதி ஜயலக்ஷ்மி கந்தையா (சைவ இலக்கியங்களில் ஆராய்ச்சி செய்யும் திரு கந்தையா அவர்களின் மனைவி) தமிழ்ப் பிள்ளைகளுக்கு நடனக்கலையைக் கற்றுக்கொடுக்கிறார். அவருடைய மாணவிகள் அடிக்கடி பல நிகழ்ச்சிகளில் நடன விருந்தளிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் தமிழ் இசைக் கருவிகளும் இசைக்கப்படுகின்றன. சில சமயங்களில் இங்கே தமிழ்ப் படங்களும் பார்க்கலாம். இப்படி நாங்கள் இலண்டனில் முத்தமிழையும் வளர்த்து வருகிறோம்.

# பண்டிதமணி கதிரேசச் செட்டியாரும் தென்னிந்தியப் பிராமணர்களும்

மகிபாலன்பட்டி முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் 1933 ஏப்பிரல் 1, 2ஆம் நாள்களில் இலங்கை யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தின் பதினொராவது ஆண்டு நிறைவு விழாவில் தலைமை ஏற்றுத் தமது தலைமையுரையில்

> "தென்னிந்தியாவிலுள்ள பிராமணர் ஒரு வகுப்பாராகவே இருந்து தமிழைத் தாழ்த்தியடக்கியும். சமஸ்கிருதத்தை ஆதரித்துயர்த்தியும் வருகின்றனர் எனவும், சென்னை, அண்ணமலை என்னும் இரு பல்கலைக்கழகங்களிலும் பிராமணர் வலுத்த கட்சியாயிருந்து அத்துணை பலமாகத் தமிழுக்குத் தடை செய்து வருவதால் தமிழர்கள் தங்கள் தாய்மொழியின் நிலையினை உயர்த்துதற்கு ஒன்றுமே செய்துகொள்ள முடியாதவராகின்றனர் எனவும்"

தமது பட்டறிவிற் கண்டதை உள்ளபடியே கூறினர்.

இச் செய்தியினைக் கீழே காணப்பெறும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சமஸ்கிருதப் பேராசிரியர் திரு. என். நாரரயணன், பி.ஏ., பி.எல். எல்.டி. சென்னை அட்வொகேட் எஸ். சத்தியமூர்த்தியவர்கட்கு 3-4-33இல் எழுதிய கடிதத்தாலும் திரு. சத்தியமூர்த்தியவர்கள் 14-4-33இல் திரு. என். நாராயணனுக்கு எழுதிய மறுமொழிக் கடிதத்தாலும் அறிவீர்கள்.

ஓம்

*யாழ்ப்பாணம், இந்துக்கல்லூரி,*
*வண்ணார்பண்ணை (சிலொன்)*
*3 ஏப்ரல், 1933*

**என். நாராயணன்**, *பீயே, பியெல், எல்டி,*
*ஸம்ஸ்கிருத பேராசிரியர்.*

*அன்பார்ந்த ஐயா,*

*யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பதினொராவது ஆண்டு நிறைவு விழா, தென்னிந்தியாவில் ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த மகிபாலன்பட்டி (யிலிருக்கும்) யாரோ மிஸ்டர் கதிரேசச் செட்டியார் என்னும் ஒருவரது தலைமையில் ஏப்ரல் 1-ம் 2-ம் தேதிகளில் நடைபெற்றது. முதலாந்தேதி காலையில் குறிப்புரைகளாக*

அவர் நிகழ்த்திய பேச்சில் 'தென்னிந்தியாவிலுள்ள பிராமணர் ஒரு வகுப்பாராகவே, தமிழைத் தாழ்த்தியடக்கியும் ஸமஸ்கிருதத்தை ஆதரித்துயர்த்தியும் வருகின்றனர்' எனக் கூறினர். இன்னும் சென்னை அண்ணாமலை என்னும் இரு சர்வகலாசாலைகளிலும் பிராமணர் வலுத்த கக்ஷியாயிருந்து அத்துணை பெலமாகத் தமிழுக்குத் தடை செய்வதால் தமிழர்கள் தங்கள் தாய்ப்பாஷையின் அந்தஸ்தை உயர்த்துவதற்கு ஒன்றுமே செய்துகொள்ள முடியாதவராகின்றனர் எனவுங் கூறினர்.

ஏப்ரல் 2 உ ஆகிய மறுநாட்காலையில் 'மனுவும் குறளும்' என்னும் விஷயத்தில் உபந்நியாசஞ் செய்யும்படி யான் ஏற்படுத்தப்பட்டிருந்தேன். விஷயத்தைத் தொடங்கு முகத்தானே யான் தலைவர் முதனாட்கூறிய குறிப்புரைகளை மறுத்துப் பிராமணர்களும் தமிழர்தாம் எனவும், அவர் தாய்ப்பாஷையும் தமிழே யெனவும், கடந்த அறுபது எழுபது வருடங்களில் தென்னிந்திய மக்களுள் தமிழின் அந்தஸ்தை உயர்த்துவதில் பிராமணர் முன்னணியாய் நின்றுழைத்துள்ளார்களெனவும் கூறினேன். என் கூற்றை நிரூபித்தற்காக மகாமகோபாத்தியாய வே. சாமிநாதையர், சென்னை வழக்கறிஞர்கள் கே. வீ. கிருஷ்ணசாமி ஐயர், ரீ. எம் கிருஷ்ணசாமி ஐயர் என்போர், ராமநாதபுரம் பண்டிதர்கள் ராகவ அய்யங்கார்கள், செந்தமிழ்ப் பத்திராசிரியர் திரு நாராயண அய்யங்கார், காலஞ்சென்ற வீ. கிருஷ்ணசுவாமி அய்யர் (செட்டியார் தானே தம் முன்னுரையில் இவரைக் குறிப்பிட்டனர்) என்பவர்களதும் வேறு சிலரதும் பெயரை எடுத்துக்காட்டினேன் இன்னும் என் கூற்றை வலியுறுத்தற்காகக் கலித்தொகையின் முதற் பதிப்பாளர் காலஞ்சென்ற மிஸ்டர் சி. வை. தாமோதரம் பிள்ளை யொருவர் நீங்கலாக எட்டுத் தொகை பத்துப்பாட்டு என்னும் சங்க நூல்களைப் பதிப்பித்த இக்காலப் பதிப்பாளர்களெல்லாரும் பிராமணர்களேயென்றும் எடுத்துச் சொன்னேன். சி. வை. தாமோதரம் பிள்ளை யென்பவர் தென்னிந்தியாக்காரரேயல்லர், யாழ்ப்பாணக்கனவானுவர்.

என்னுடைய பேச்சைப் பற்றிக் குறிப்புரை கூறுங்கால் தலைவர் தாம் முன்பு தென்னிந்தியாப் பிராமணர்கள் தமிழைத் தாழ்த்தி யொடுக்குகிறார்களென்று குறைகூறியபோது, பொது ஜனங்களுக்குத் தங்களை நன்றாய்த் தெரியும்படி செய்துகொண்டவர்களும், நான் பழகியதிலும் அல்லது பழகக் கூடியதிலும் பார்க்க, மிக அணுக்கமாய்த் தாம் கூடிப் பழகியுள்ளவர்களுமாகிய நல்லவர்களான இச்சிலவரைக் கருதவில்லை யென்றும், மற்று வேறு பிராமணர்கள் ஆயிரக் கணக்கானவர் பத்து லக்ஷக்கணக்கானவர்களைக் கருதினேனென்றும் பெயரைச் சொல்லுதல் துஷ்பிழைக்குமாறாகலின் அவர்கள் பெயர்களைத் தான் சொல்ல முடியாதென்றும் சொன்னர்கள். மேலும் சென்னை, அண்ணாமலை என்னும் சர்வகலாசாலைகளின் அதிகார சபைகளிலுள்ள பிராமணர்களைக் குறிப்பிட்டுக்காட்டி அவர் சொன்னபடி) தமக்கு மிஸ்டர் சாமிநாதையராலேயே கொடுக்கப்பட்ட தகவலின்படி அந்தப் பிராமணர்கள் தமிழுக்கு நீங்காத கடும் வைரிகளென்றும் சொன்னர்.

இன்னும் அவர் காலஞ்சென்ற பி. ரீ. சிறீநிவாச அய்யங்காருடைய பெயரைச் சொல்லி மதுரையில் ஒருமுறை அவர் கண்ணியமான பெரும் பண்டிதசபையொன்றில் தமிழைக் காமப்பாஷை என இழிவுபடுத்திக் கூறினர். ஆனாலும் அவரது வாழ்விறுதிக் காலத்தில் தமிழின் நலன்களை ஒப்புக்கொள்பவராக மாறிவிட்டாரென்றும் சொன்னர்.

செட்டியாருடைய இக்குறிப்புரைகளுக் கிடையிடையே உரத்த கரகோஷம் நிகழ்ந்து வந்தது சபையார் மனதில் அவர் விஷமத்தனமான கருத்தைப் பதித்துவந்தார் என்பதைக் காட்டிற்று. இது உண்மையானல் குறிப்பிட்ட இரண்டு சர்வகலாசாலைகளினதும் அதிகார சபையாரது பெயருக்குக் கெடுதலான பெரும் இழுக்குச் செய்வதாகும். பொய்யாயின் இவை வன்மஞ்சாதிக்கும் பெரும் பழிமொழிகளாகுமாகலின் கூடியளவு விரைவாயும் வற்புறுத்தியும் பொய்யை வெளியாக்கி மறுத்தல் வேண்டும்.

இந்த நிலைமையில் தங்களை நான் வேண்டுவது குறிப்பிட்ட இரண்டு சர்வகலாசாலையாருக்கும் இவ்விஷயத்தை ஆலோசனைக்கு உய்ப்பித்து இங்குள்ள மக்கள் இதைப் பற்றிய நிஜமான உண்மையை அறியும்படி செய்ய வேண்டுமென்பது. இதைப் பற்றித் தங்களுக்கு நேரே அறிந்தனவுளவேல் அவ்வறிவுச் சுடர் கொளுத்தி இதனை விளங்கச் செய்வீர்களாயின் அந்நன்றியையும் நான் பாராட்டுவேன்.

இங்ஙனம்,

இவ்வறிவித்தலுக்கு விரைவில்
மறுமொழியை எதிர்பார்த்திருக்கும்
தொண்டில் தங்களது

(ஒம்) என். நாராயணன்.

S. சத்தியமூர்த்தி,
அட்வொகேட்.

2/18, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை, 14—4—33

அன்புள்ள மிஸ்டர் நாராயணன்,

ஆதிரை பிரதியொன்றும் உங்களுடைய கடிதமும் கிடைத்தன. மிக்க வந்தனம். தங்கட்கு எல்லா நன்மையுமுண்டாக விரும்புகிறேன்.

பிராமணர் தமிழுக்கு இடையூருக இருக்கிறார்கள் என்று குறை கூறுவது பொய்யானதாயும் பொருமையுடன் சொல்லப்பட்டதாயும் இருக்கிறது. அது பிராமணரல்லாதார் கூட்டத்தின் இயற்கை. ஒரு மனிதன் தமிழ் சமஸ்கிருதம் இரண்டையும் நேசிக்க முடியாது என்ற மூடக் கொள்கையை அது ஆதாரமாகக் கொண்டுள்ளது. இந்தத் தீர்மானத்தின்படி ஒருவர் ஒன்றையோ அல்லது மற்றொன்றையோ வெறுக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் என் தாயாரையும் தகப்பனரையும் போல நான் அவ்விரண்டையும் நேசிக்கிறேன். வெளிப்படையாக அப்படியே சொல்லியுமிருக்கிறேன். சமஸ்கிருதத்தையும் தமிழையும் வளரச்செய்ய, வேண்டிய முயற்சிகளைக் கூடுமானவரை செய்துகொண்டிருக்கும் அண்ணமலை சென்னை சர்வகலாசாலைகளின் சிண்டிகேட்டின் அங்கத்தினராக நான் இருந்திருக்கிறேன். இப்பொழுதும் இருக்கிறேன். மேலும் சமஸ்கிருதத்தை ஆதரிக்காமல் தமிழைப் பலப்படுத்த முடியாதென்பது என்னுடைய நம்பிக்கை. தமிழை விரும்பி சமஸ்கிருதத்தை வெறுப்பதை நான் மறுக்கிறேன். அதுதான் என்னுடை எதிர்ப்புக்குத் தலையாயுள்ளது. அண்ணமலை சர்வகலாசாலையில் தமிழில் ஆனர்ஸ் வகுப்பு நடத்தப்படுகிறது. மற்றொரு ஒப்பற்ற விஷயம் - தமிழில் தர்க்க சாஸ்திர சம்பந்தமான ஒரு பாட

புத்தகத்துக்காக ரூ 1000 பரிசளிக்கப்பட்டது. பி. ஏ. வகுப்பிலும் இண்டர்மீடியேட் வகுப்பிலும் 2வது பிரிவிற்குத் தமிழ் கற்பிக்கப் படுகிறது. வித்துவான் வகுப்பிற்குத் தயாரிக்கும் ஒரு தனித்தமிழ்ப் பிரிவும், ஆசிரியர்களின் போதனுமுறை பயின்ற யோக்கியதாபத்திரங்களளிக்கும் பரிக்ஷைகளும் உள்ளன. சென்னைச் சர்வ கலாசாலையும் தமிழுக்கு ஏராளமான நன்மையைச் செய்து கொண்டிருக்கிறது. அதில் தமிழாராய்ச்சிக் கழகம் ஒன்று இருக்கிறது. சுமார் 6 லக்ஷ ரூபாய் செலவில் தமிழ் லெக்சிகன் பிரசுரமாகிக் கொண்டு வருகிறது. மாணவர்களின் பாடக் கிரமத்தில் தமிழுக்கு மேன்மையான இடத்தையுங் கொடுத்திருக்கிறது. இதைவிட அதிகஞ் செய்ய முன்வருவது ஒன்றுமில்லை.

(ஒம்) சத்தியமூர்த்தி.

தமிழிலும் வடமொழியிலும் நிறைந்த புலமையுடையவரும் தமிழ்நாட்டில் பல தமிழ்ச் சங்கங்களின் மாநாடுகளிலும், சமயப் பேரவைகளிலும் சொற்பொழிவாற்றியவரும் வடமொழி இலக்கியங்களிலும் வடமொழி நீதிநூல்களிலும் ஈடுபட்டு அவற்றைத் தமிழரிடையே பரப்ப அந்நூல்களுட் சிறந்தவையான மிருச்சகடி, சுக்கிரநீதி, கௌடிலிய சாத்திரம் ஆகியவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தவரும், பெரும் புலவர்களோடு பழகியவருமாகிய பண்டிதமணியவர்கள் தமது 52ஆம் அகவையில் மேலே கண்டவாறு தென்னிந்தியப் பிராமணர்களைப் பற்றிக் கூறியது உண்மைக்குப் புறம்பானது என்று எங்ஙனஞ் சொல்ல முடியும்? அவர் முன்னிகழ்ந்தவற்றையெல்லாம் நேரிற் கண்டும் பின் நிகழவிருப்பனவற்றை யெல்லாம் உய்த்துணர்ந்தும் பிராமணர்கள் நேரிலும் மறைமுகமாகவும் தமிழ் வளர்ச்சிக்குச் செய்யும் இடையூறுகளை நினைந்தும் மனம் நொந்து கூறினார்கள் என்பது தெள்ளத் தெளிய விளங்குகிறதன்றோ!

திரு. நாராயணனுக்கு விடை எழுதிய திரு. சத்தியமூர்த்தியவர்கட்கு நன்கு தெரியும் பண்டிதமணியின் பண்பாடும் சிறப்பும். ஆதலின், அவரைப் பற்றிக் குறை கூறிற்றிலர். ஆனால் 'பிராமணர் அல்லாதார் கூட்டத்தியற்கை' என அதிற் பண்டிதமணி அவர்களைச் சேர்த்தது வருந்தத்தக்கது. அவர் தமிழைத் தாய்மொழியாகவும் சமற்கிருதத்தைத் தந்தைமொழியாகவும் நேசிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழர்கட்குத் தாய் மொழி ஒன்றுதான் உண்டு. அது சாவா மூவாத் தமிழேயாகும். மதிப்புக்குரிய சீனிவாச சாத்திரியாரோ சமற்கிருதத்தை முந்தையோர் மொழி என்றும் தமிழை வீட்டு மொழியென்றும் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதுபெரும்புலவர் பண்டிதமணியவர்கள் தமது முடிவுரையில் கூறியதுபோல். மறைத்திரு மறைமலையடிகளும் பார்ப்பன

அறிஞர்களுள் திரு. பி. டி. சீனிவாச ஐயங்கார், டி. ஆர். சேசையங்கார், திரு. இராமசந்தர தீட்சிதர், சுப்பிரமணிய பாரதியார் போன்ற சிலரை நேர்மையானவர்கள் என்று கூறியதுண்டு.

அதே ஆண்டு திசம்பர்த் திங்கள் இறுதி நாட்களில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தமிழன்பர் மாநாட்டைப் பற்றிச் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 43 பரல் 10இல் காண்க. தமிழன்பர் மாநாட்டில் தமிழ்நாட்டிலே வாழ்ந்த பெரும்புலவர்களாய மறைத்திரு மறைமலையடிகள், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், நாவலர் வேங்கடசாமி நாட்டார், பேராசிரியர் கா. சு. பிள்ளை, சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை போன்றவர்கள் மாநாட்டிலே ஈடுபடுத்தப் பெற்றிலர்.

மாநாட்டிலே கலந்து கொள்ளுமாறு செயற்குழுத் தலைவர் திரு. கே. வி. கிருட்டிணசாமி ஐயர் மறைமலையடிகளுக்கு 22-12-33இல் அனுப்பிய கம்பிச் செய்திக்கு அடிகள் "தூய தமிழை வளர்க்க விரும்பாத எந்தத் தமிழ்க் கூட்டத்திலும் கலந்து கொள்வதற்கு எமது மனம் இடந்தரவில்லை" எனத் தெரிவித்துவிட்டனர்.

மாநாட்டின் செயற்குழுவின் செயலர் திரு பெ. நா. அப்புசாமி ஐயர் பண்டிதமணியவர்கட்கு 27-11-33இல் எழுதிய கடிதமும் பண்டிதமணியவர்கள் 15-12-33இல் எழுதியனுப்பிய மறுமொழியும் பண்டிதமணியவர்கள் யாழ்ப்பாணத்தில் பேசியது மறுக்கற்பாலதன்று என்பதைப் புலப்படுத்துமாதலால் அவை கீழே தரப்படுகின்றன.

**திரு. பெ. நா. அப்புசாமியவர்கள் எழுதிய கடிதம் :**

*"தாங்கள் அன்புடன் எழுதிய கடிதங்கள் கிடைத்தன. தாங்கள் வந்திருந்து இம்மாநாட்டை நடத்தித் தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.*

*"சென்னையில் கூட்டுவதற்கு முயற்சி செய்கிற இம்மாநாட்டைப் பற்றிச் சிற்சில பத்திரிகைகளில் தவருன அபிப்பிராயம் கொண்டு குறைவாக எழுதி வருகிருர்கள். தாங்கள் அதில் கலந்துகொள்ள வில்லை என்று எண்ணி அதை ஒரு குறை என்று எடுத்துக்காட்டுகிருர்கள்.*

*"இப்பேர்பட்ட தப்பு அபிப்பிராயங்களை நீக்கும்பொருட்டுத் தாங்களும் கலந்து கொண்டிருக்கிறீர்களென்று வெளியிட்டுப் பிரசாரஞ் செய்யும் பொருட்டுத் தங்களுடைய அபிப்பிராயங்களையும் தங்களைப்போன்ற வேறு சில தமிழ் அறிஞர்*

*சொல்லியுள்ள அபிப்பிராயங்களையும் பத்திரிகையில் வெளியிடலா மென்று எண்ணியிருக்கிறோம். அதற்குத் தாங்கள் சம்மதிப்பீர்கள் என்று எண்ணுகிறோம். தங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க் கிறோம்.''*

*தங்கள்,*

(ஒப்பம்) பெ. நா. அப்புஸ்வாமி.

தமிழன் ஒருவனையே தம் கையாளாகக் கொண்டு அவனைக் கொண்டே தமிழுக்கு ஊறு விளைப்பது இவ்வினத்தாரின் சூழ்ச்சி களுள் ஒன்று. பண்டிதமணி இதற்கு உடன்படுவரா ?

**அதற்குப் பண்டிதமணியவர்கள் 15—12—33இல் எழுதிய மறுமொழி வருமாறு :**

*''தமிழன்பர் மாநாட்டில் யான் கலந்து கொள்ளவில்லையென்று பிறர் எடுத்துக் காட்டியதன் நிமித்தம் அத்தப்பபிப் பிராயங்களை நீக்கும் பொருட்டு என்னை அம்மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டு மென்று தாங்கள் கேட்டிருப்பது எனக்கு வியப்பைத் தருகின்றது. இதனால் என் போன்றவர்களைத் தாங்கள் எத்துணை மதித்திருக் கின்றீர்களென்பதும் புலனாகின்றது. தங்களுக்கு உண்மை மதிப்பு இருக்குமாயின் பிறர் கூறும் குறையைப் பரிகரிக்கும் அவ்வளவில் என்னைப் பயன்படுத்திக் கொள்ள எண்ணியிருக்கமாட்டீர்கள்.*

*''தமிழன்பர் மகாநாடு பல்லாற்றானும் தமிழ்க்கலை வளர்ச் சிக்கு வேண்டுவன சூழ்ந்து வெற்றியுடன் நிறைவேறும் வண்ணம் எல்லாக் கலைகளுக்கும் முதல்வராகிய இறைவன் திருவருள் முன் னிற்பதாக''*

(ஒப்பம்) மு. கதிரேசச் செட்டியார்.

**பிராமணர்கள் தமிழ் மொழிக்குத் தொடர்ந்து செய்து வந்த தீங்கினை அடியிற் காண்க :**

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 1936 ஆம் ஆண்டு இடை நிலைத் தேர்வுக்கு மறைத்திரு மறைமலையடிகள் எழுதிய 'அறிவுரைக் கொத்து' என்னும் நூல் பாடமாக வைக்கப் பெற்றது. அதில் அடிகள்,

''வடநாட்டவரும் மேல்நாட்டவரும்'' என்ற கட்டுரையில் 'ஆரியர் - பார்ப்பனர் - தமிழர்' என்ற வேற்றுமையை வளர்க் கிறார். ஆதலால், அதனைப் பாடமாக வைத்திருப்பதை மாற்றி விட வேண்டுமென்று பிராமணர்களும், பிராமண இதழ்களும் கிளர்ச்சி செய்தன.

முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியர் 1938இல் வட நாட்டு இந்தியைத் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் கட்டாயப் பாட

மாக வைத்தபோது 'இந்தி எதிர்ப்பியக்கம்' மிக்க வலிவோடு நடைபெற்றது. அப்போது இந்தி மொழி கட்டாயப் பாடமாவதால் சமற்கிருதத்திற்கு ஆக்கமுண்டாகும் என்று அதனைப் பார்ப்பனர்களும், பார்ப்பன ஏடுகளும் ஆதரித்ததோடு இந்தியைப் பெரு விருப்போடு பார்ப்பனர் பலர் கற்றுவரலாயினர்.

1940இல் இராசா சர் அண்ணுமலைச் செட்டியாரவர்கள் தமிழிசைச் சங்கத்தைத் தோற்றுவித்து இசையரங்குகளில் தமிழ்ப் பாட்டுக்களையே பாடுதல் வேண்டுமென்று முயற்சி செய்தபோது பிராமணர்கள் அதனைக் குறைகூறிக் கர்நாடக சங்கீதத்தை உயர்த்திப் பேசி வந்தனர்.

சென்னை அரசுக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைப்பதற்கும், ஊர்ப் பெயர்கள், புகை வண்டி நிலையப் பெயர்கள், அரசு கட்டிடங்களின் பெயர்கள் முதலியவற்றிற்குத் தமிழ்ப் பெயர்கள் வைப்பதற்கும் எதிர்ப்புக்கள் ஏற்பட்டன.

ஆங்கில அறிவியற் சொற்களுக்குத் தூய தமிழ்ச் சொற்களை அமைக்கும்போது சமற்கிருதச் சொற்களையே அமைக்க வேண்டுமென்று ஏற்பட்ட எதிர்ப்பும் யாவரும் அறிந்ததே.

கோயில்களில் மக்கட்குப் புரியாத மொழியில் மலர்தூவி வழிபாடு (அருச்சனை) செய்து வருவதை விடுத்துத் தமிழில் செய்தல் வேண்டுமெனின் அதற்கு எதிர்ப்பும் வழக்கும் காண்கிறோம்.

ஆரியர் (பிராமணர்) வந்தபின்னர்த் தமிழ்மொழி சிதைக்கப் பெற்றுத் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய மொழிகள் அதனினின்றும் பிரிந்தன. தமிழ்நாடும் அவ்வாறே ஆந்திரம், கன்னடம், மலையாளம் எனத் தனிநாடுகளாகப் பிரிந்து போயின. பழந்தமிழ் நூல்கள் பல ஒழிக்கப்பெற்றன. பழந்தமிழர் பண்பாடும் நாகரிகமும் சீர்குலைக்கப் பெற்றன. எனவே, வந்தேறிகளாயினும் பிராமணர்கள் ஒரு வகுப்பாராகவே வாழ்வதை விட்டுக் கலந்து தமிழை உள்ளபடியே தாய்மொழியாகக் கொண்டு ஒன்றுபட்ட தமிழர்களாக வாழவேண்டுமென்று விரும்பியே மூதறிஞர் பண்டிதமணியவர்கள் கூறியதில் என்ன தவறு!

---

வ. சு.

# ‘வேண்டா’ எனுஞ் சொல் பற்றிய ‘செந்தமிழ்ச் செல்வி’ கட்டுரையாளருக்கு மறுப்பு

[தமிழ்ப் பெரும்புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை]

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்பது புதுவது புனைந்த மொழியன்று. இஃது முதுமொழியாய் வழங்குவதைக் கற்றோரேயன்றி மற்றோரும் அறிவர். தொல்காப்பியம் மொழித் திறத்தை வரையறுத்த இலக்கண நூல்களுள் முதன்மையான நூலாகும் என்பதை அனைவரும் அறிவர். இந்நூல்களி லெல்லாம் வேண்டுவது இல்லையென்னும் பொருளையுணர்த்தும் ‘வேண்டா’ என்னுஞ் சொல்லே இடம் பெற்றிருக்கக் காண் கிறோம். உலகநாத பண்டிதர் என்பவரால் இயற்றப்பட்ட ‘உலக நீதி’ என்னும் நூல் ‘வேண்டாம்’ என்னுஞ் சொல்லைக் குறிப்பிடுகிறது. இச்சொல் சீரிய இலக்கியங்கள் என்று போற்றப்படுவனவற்றுள் எதிலும் இடம் பெறாத சொல்லாகும்.

பிற்காலத்து நீதி நூல்களிலும் ‘வேண்டா’ என்னுஞ் சொல்லே பயின்று வந்திருத்தலைக் காணலாம். ‘என்று தருங்கோல் எனவேண்டா’ என்பது ஔவை வாக்கு. பல ஆண்டுகளுக்கு முன் யான் பதிப்பித்த எம். பி. இராஜன் கம்பெனிப் பாடநூலில் ‘உலக நீதி’ அடிகளைத் தொகுத்து அமைத்தபோது ‘வேண்டா’ எனவே திருத்தியமைத்தேன். அப்பொழுது பாடநூல் ஆய்வுக்குழுவிலே உறுப்பினராய் இருந்த ஒருவர், அதைத் தவறு என்று கருதி அப்பாடநூலை ஏற்றுக்கொள்ளாதுவிட்டார். அப்பொழுது பேராசிரியர் இராமநாதன் அவர்கள் அக்குழுவிற்குத் தலைவராய் இருந்த தனால், நூல் வெளியீட்டாளர் அவருக்கு “இந்தச்சொல் பிழை யானது என்று எங்கள் ஆசிரியர் சொல்கிறார். இதைப்பற்றி நீங்கள் தக்க தமிழ்ப் பெரியவர்களைக் கேட்டறிந்து அவர்கள் சொல்லுகிற திட்டப்படி, எனக்குத் தீர்ப்புக் கூற விழை கின்றேன்,” என்று வேண்டிக்கொள்ள, அவர் மாபெரும் புலவராய்த் திகழ்ந்த தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சா. அவர்களிடத்துச் சென்று இச்சொல்லைப்பற்றிய முடிவை ஆய்ந்தபோது தமிழ் கற்றவர் யாரும் ‘வேண்டா’ என்றுதான் எழுதுவது வழக்கம். தமிழறிவு பெறாதவர்கள் ‘வேண்டாம்’ என்றே பேசிக்கொண்டிருப்பதையும் எழுதிக் கொண்டிருப்பதையும் காண்கிறோம். பாடநூல்களில் இத்தகைய பிழைகள் இளமைப்பருவத்திலேயே திருத்தப்படுவது நலம் என்று கருத்துரை வழங்க, அங்ஙனமே குழுத்தலைவர் அந்நூலை

ஏற்புடைத்து என ஏற்றுக்கொண்டது அக்காலத்து நிகழ்ந்த நிகழ்ச்சி.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் அதே வினவை இப்பொழுது திரு. ஆபிரகாம் அருளப்பர் அரசாங்க வெளியீட்டிலே இக்குறை நேர்ந்திருப்பதாகப் புலவர் குழுவில் இப் பிரச்சினையைக் கொண்டுவந்தபோது அது தோல்வியுற்றது என்பதையறிந்தும், அவர் செந்தமிழ்ச் செல்வியிலும் இதைப்பற்றி எழுதியிருப்பதை நான் கேள்வியுறுகிறேன். இது பாராட்டுக்குரியதன்று. அறியாதவர்கள் செய்கின்ற பிழைகளையெல்லாம் சரியானவையென்று பாடநூல்களில் புகுத்துவது பலர் பழிப்புக்கு இடமாகும் என்பதை அறிந்தே பாடநூலில் இப்பிழை நீக்கப்பட்டது. இது நிற்க.

*"அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்*
*கடக்கக் கருதவும் **வேண்டா**."*

என்னும் ஔவையார் கட்டளையைப் பின்பற்றி வாழ்வதே கற்றறிந்த மாந்தர் கடன்.

பழைய தமிழ் நூல்களில் 'வேண்டா' என்பதே எதிர்மறைப் பொருளில் ஆளப்பட்டிருப்பதைக் கீழ்வரும் எடுத்துக் காட்டுகளே புலப்படுத்தும்.

**தொல்காப்பியம்**

**சொல்** *வெளிப்படு சொல்லே கிளத்தல் **வேண்டா**.*
தொல்-சொல்-உரி 2

**பொருள்** (1) *ஒன்றும் **வேண்டா** காப்பி னுள்ளே.* ,, பொருள் 5 : 19
(2) *தன்சீ ருள்வழித் தலைவகை **வேண்டா**.* ,, ,, 8 : 52

**திருக்குறள்**

1. *அறத்தா றிதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோ டூர்ந்தா னிடை.* குறள்-37
2. *மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்த தொழித்து விடின்.* ,, 280
3. *ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்*
*பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.* ,, 357
4. *அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை*
*எண்ணி இடத்தாற் செயின்.* ,, 497
5. *புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாங் கிழமை தரும்.* ,, 785

**நாலடியார்**

*பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்*
*தேதிலா ரிற்கட் குருடனாய்த் தீய*
*புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்*
*அறங்கூற* **வேண்டா** *அவற்கு.* நாலடி-158

**புறநானூறு**

1. *நினைக்க வேண்டா வாழ்கவன் றாளே.* புறம். 70 : 19
2. *வருந்த வேண்டா வாழ்கவன் றாளே.* ,, 101 : 10
3. *பரியல் வேண்டா வருபத நாடி.* ,, 172 : 5
4. *சொல்ல வேண்டா தோன்றன்முந் தறிந்த.* ,, 361 : 21

**கலித்தொகை**

*நாடினர் கொயல்வேண்டா.* கலித். 28-2

**சிலப்பதிகாரம்**

*உணர்வுடை மாக்கள் உரைக்க* **வேண்டா.** சிலப். 28 : 156

**மணிமேகலை**

*இளவேய்த் தோளாய்க் கிதுவென* **வேண்டா.** மணி. 23 : 127

**திணைமாலை நூற்றைம்பது**

1. *தந்தாயல் வேண்டாவோர் நாட்கேட்டுத் தாழாது* பாடல் 46
2. *கோளுடல் வேண்டா குறியறிவார்க்*
   *கூஉய்க்கொண்டோர்* ,, 54
3. *என்வீழல் வேண்டா வினி.* ,, 57
4. *விளரியாழ்ப் பாண்மகனே வேண்டா.* ,, 126
5. *மடங்கிறவு போலும்யாழ்ப் பண்பில்லாப் பாண*
   *தொடங்குறவு சொற்றுணிக்க வேண்டா.* ,, 138

**ஐந்திணை ஐம்பது**

*வருவர் வயங்கிழாய் வாளொண்க ணீர்கொண்*
*டுருகி யுடன்றழிய வேண்டா.* பாடல் 9

**திணைமொழி ஐம்பது**

1. *வானுயர் வெற்ப இரவின் வரல்வேண்டா.*
   *யானை யுடைய சுரம்.* பாடல் 1
2. *நல்வய லூரன் நலமுரைத்து நீபாண*
   *சொல்லிற் பயின்றுரைக்க வேண்டா.* ,, 31

**பழமொழி நானூறு**

1. தேவர்க்கு மக்கட் கெனல் வேண்டா. 43. 3
2. தாம்நட் டொழுகுதற்குத் தக்கார் எனல்வேண்டா. 129. 1
3. தமக்குத் துணையாவார்த் தாந்தெரிதல் வேண்டா. 150. 2
4. தனியேம்யாம் என்றொருவர் தாமடியல் வேண்டா. 154. 2
5. உற்றான் உறுஅன் எனல்வேண்டா. 173. 1
6. காட்டிக் களைது மெனல் வேண்டா. 175. 2
7. முனிந்தாரைத் தஞ்சம் மொழியலோ வேண்டா. 183. 2
8. தேற்றார் சிறிய ரெனல்வேண்டா. 237. 3
9. ஆகும் சமயத்தார்க்கு ஆள்வினையும் வேண்டாவாம். 238. 1
10. செல்விருந் தாகிச் செலவேண்டா. 338. 2
11. நிலைப்பொரு ளென்றதனை நீட்டித்தல் வேண்டா. 341. 3

**ஆசாரக் கோவை**

மிகக்கிழமை யுண்டெனினும் வேண்டாவே பெண்டிர்க்
குவப்பன வேறாய் விடும். பாடல். 82

**சிறுபஞ்சமூலம்**

உள்ளநோய் வேண்டா உயிர்க்கு. பாடல் 62

**கைந்நிலை**

தக்கயாழ்ப் பாண தளர்முலையாய் மூத்தமைந்தார்
உத்தரம் வேண்டா வரல். பாடல் 48

**நீதிநெறி விளக்கம்**

முழுமணிப் பூணுக்குப் பூண் வேண்டா.

நமக்குப் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், பதினெண் கீழ்க்கணக்கும் முன்வரிச் சட்டம். ஆகையால் 'வேண்டா' என்பதுதான் சரி. குறை சொல்வார் சிலருள்ளே இவரும் ஒருவர் என்பதே கொள்ளத்தக்கது.

இப் பிழையை எடுத்துக்காட்டியவர் பழைய இலக்கியங் களிலோ, பிற்கால இலக்கியங்களிலோ உலகறிந்த புகழுக்குரிய புலவர்களும் 'வேண்டாம்' என்னுஞ் சொல்லைப் பயன்படுத்தி யிருக்கிறார்கள் என்று எடுத்துக்காட்டினால், அஃது ஏற்றுக் கொள்ளப்படும். பிழைகளையெல்லாம் நூல் வடிவிலே கொண்டு வருவது மொழித்திறச் சிதைவுக்குக் காரணமாய் நின்று அரசாங்கப் பாடநூல்களில் இத்தகைய பிழைபட்ட சொற்கள் இடம் பெறுமானால் அதைத் தமிழறிஞர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

# தமிழறிஞர் கா. சு. பிள்ளை அவர்களின் நினைவு விழா

திருநெல்வேலியில் தோன்றித் தமிழுக்கும் சைவத்துக்கும் அரும் தொண்டாற்றிய தமிழ்ப் பேரறிஞர் பல்கலைப் புலவர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் நினைவு நாள் 29-4-73 ஞாயிறு மாலை 7 மணிக்கு நெல்லை அருள்மிகு அன்னை காந்திமதி ஆலய ஊஞ்சல் மண்டபத்தில் புலவர். திரு. தி. சு. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நெல்லை இலக்கிய வட்டத்தின் சார்பில் நடைபெற்றது.

திரு. நா. சுப்பிரமணியம் இறைவணக்கம் பாடினார். புலவர் திரு. ம. சிவசம்பு அனைவரையும் வரவேற்றார். நெல்லையப்பர் கோயில் அறங் காவலர் குழுத் தலைவர் திரு ப. இலக்குமணன் விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றினார். தலைவர் தமது முன்னுரையில் கா. சு. பிள்ளை அவர்களின் பணியைப் போற்றி அவர்கள் தாகூர் சட்ட விரிவுரையாளர் பட்டத்தைப் பெற்று அனைத்து இந்தியாவிலேயே திருநெல்வேலிக்குத் தனித்த புகழ் தேடித் தந்தார்கள் என்பதைக் குறிப்பிட்டார்கள்.

சமயத் துறையில் கா. சு. பிள்ளை என்ற தலைப்பில் திருவைகுண்டம் குமரகுருபரர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. ந. சொக்கலிங்கம் அவர்கள் கா. சு. பிள்ளை செய்த சமயக் குரவர் வரலாற்று ஆராய்ச்சி, சிவஞான போத ஆராய்ச்சி ஆகியவைகளில் காணப்படும் கருத்தாழத்தையும் சமயப் பற்றையும் விளக்கிப் பேசினார்கள்.

இலக்கியத் துறையில் கா. சு. பிள்ளை என்ற தலைப்பில் பாளையங் கோட்டை திரு. சி. சு. மணி அவர்கள் கா. சு. பிள்ளை அவர்களின் நூலாராய்ச்சித் திறத்தைப் பாராட்டி அவர் எவ்வாறு தமிழ்ச் சமுதாயத் தால் புறக்கணிக்கப்பட்டார் என்பதை விளக்கிப் பேசினார்.

விழாவை ஒட்டி கா சு. பிள்ளை அவர்கள் நூல்களைக் கொண்ட கண்காட்சி ஒன்று நெல்லை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலக்கிய வட்டச் செயலாளர் திரு. மு சு. சங்கர் நன்றி கூறும் போது கா. சு. பிள்ளை அவர்களுக்கு, அவர்கள் நடுகலில் அமர்ந்துள்ள பூங்காவில் திரு. ப. இலக்குமணன் அவர்கள் தலைமையில் குழு அமைத்துச் சிலை அமைக்க இருப்பது பற்றி விளக்கி, வந்திருந்த அனைவருக்கும் நன்றி கூறினார்கள். இறைவணக்கத்துடன் முதல் நாள் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

## நடுகல் அஞ்சலி

விழாவில் இரண்டாம் நாளான 30-4-73 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு இலக்கிய வட்டத்தின் சார்பில் திருநெல்வேலி சந்திப்பு தருமபுர ஆதீனத்திலிருந்து நாதசுர வித்துவான் நெல்லை பிச்சையப்பா குழுவினர் நாதசுர இசையுடன் அறங்காவலர் திரு. ப. இலக்குமணன் அவர்களின் தலைமையில் ஊர்வலமாகச் சென்று நெல்லை சந்திப்பிலுள்ள கா. சு. பிள்ளை அவர்கள் நடுகலுக்கு மலர் வளையம் வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கா. சு. பிள்ளை அவர்களுக்குச் சிலை அமைப்பதற்கு திரு. ப. இலக்குமணன் தலைமையில் சிலை அமைப்புக்குழு ஏற்படுத்தவும் தமிழக முதல்வர் மு. கருணாநிதி அவர்களைக் கொண்டு சிலை திறக்கவும் தீர்மானிக்கப் பட்டது.

# திரு. மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் சட்டத்துறைச் செயலாளரானார்

சட்டத் தமிழ்ப் பேரறிஞரான திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ. பி.எல்., அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையின் செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள். 14-5-73 அன்று அவர்கள் அப் பொறுப்பை ஏற்றுள்ளனர்.



முதல் சட்டத் தமிழ்ப் பேரறிஞரான 'தமிழ்க்காசு'வைத் தந்த திக்கெலாம் புகழும் திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் எனுமூரில் 28-6-1921இல் தோன்றியவர். இவர் கா. சு. பிள்ளையவர்களின் உறவினருமாவார். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்தபின் சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று சட்டப் படிப்பில் தேறினார்.

வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கிய இவர், தமிழக அரசின் நீதித் துறையில் பணியேற்றுச் சில மாவட்டங்களில் துணை நடுவராகத் திகழ்ந்தார். பின்னர், சட்டப்பேரவையில் துணைச் செயலாளராகப் பொறுப்பேற்றார். சென்ற ஆண்டு கூட்டுச் செயலாளராக உயர்ந்தார். தற்பொழுது செயலாளராகப் பதவி ஏற்றுள்ளார். இப் பணியுடன் தமிழக அரசின் ஆட்சிமொழிச் சட்டத்துறைக் குழுவின் செயலாளர் பதவியையும் ஒருங்கேற்றுச் சிறந்த பணியாற்றி வருகிறார்.

இவர் ஆட்சித் துறையில் மட்டுமன்றி எழுத்துத் துறையிலும் மிகச் சிறந்து விளங்குகிறார். சிறந்த அறிவாற்றலும், தெளிவான சிந்தனைத் திறனும் இவரிடம் குடிகொண்டுள்ளதால் கற்றவர்கள்கூடச் சரியாகப் புரிந்துகொள்ள இயலாத சட்டக் கருத்துகளையும் தத்துவக் கருத்துகளையும் எளிய நடையில், இனிய தமிழில் எழுதி வருகிறார். சட்டக் கருத்துகளைத் தமிழில் எழுத முடியாது என்று அனைவரும் எண்ணிவந்த காலத்தில குற்றமும் தண்டனையும், சட்டவியல், தீங்கியல் சட்டம், குற்ற இயல், சட்டத் தமிழ் போன்ற அரிய நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் முதல் நூல் இந்திய அரசின் பரிசையும் இரண்டாவதும் ஐந்தாவதும் தமிழக அரசின் பரிசுகளையும் பெற்றுள்ளன. இவர் எழுதிய 'குறள்கூறும் சட்டநெறி' என்னும் நூல் ஆராய்ச்சிப் பட்டம் பெறுதற்குரியது. அண்ணல் நேருவின் அமுத மொழிகள்' நேரு பெருமகனார் பொன்மொழிகளின் தமிழாக்கமாகும்.

'செந்தமிழ்ச் செல்வி'யில் இவர் தொடர்ந்து எழுதிவரும் 'இளமையில் இசைந்த வாழ்வு' என்னுங் கட்டுரைத் தொடர் முதியவர் முதல் இளைஞர் வரை அனைவரையும் கவர்ந்துள்ளது.

இவர் மேலும் பல உயர்வுகளைப் பெற்றுச் சிறந்து வாழ்வாராக.

# புது வாழ்வு பெற்ற பூம்புகார்

சிலப்பதிகார காலத்தில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்திர விழா, தமிழக அரசின் பெருமுயற்சியால் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. இது உவகை விழா மட்டுமன்று. கண்ணகியின் வரலாறு, பூம்புகாரின் வரலாற்றுச் சிறப்பு, பண்டைத் தமிழகத்தின் கலைத்திறன் மாட்சி ஆகியவற்றை நினைவூட்டித் தமிழக மக்களின் உள்ளத்தில் தமிழ் இனம்—மொழி—நாடு என்னும் ஒப்பற்ற மூப் பற்றினை நிலைநாட்டித் தமிழகத்தில் ஒருவகை மறுமலர்ச்சியினைத் தோற்றுவிக்கும் ஆக்க விழாவாகவும் திகழ்ந்தது. இவ்விழா பூம்புகார் நகரில் ஏப்ரல் திங்கள் 17, 18ஆம் நாள்களில் சீரும் சிறப்புமாக நடை பெற்றது.

கடந்த சித்திரைத் திங்கள் முழுமதி நாளில் (17—4—73 பூம்புகார் நகரில் இவ்விழாத் துவங்கிற்று. நாலரை இலக்க ரூபா செலவில் அமைக் கப்பட்ட சிலப்பதிகாரக் கலைக்கூடத்தைத் தமிழகக் கல்வியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதியவர்கள் திறந்து வைத்தார்

சோழமன்னர் காலத்தில், ஆண்டுதோறும் சித்திரை முழுமதி நாளில் நடைபெற்ற இந்திர விழாவை நினைப்பூட்டும் வகையில் இனி ஆண்டுதோறும் இவ்விழா நடைபெறும் என்று கலைஞர் கூறினர்.

**ஊர்வலம்**

இவ்விழாவினை யொட்டி ஏப்ரல் திங்கள் 17ஆம் நாள் பூம்புகார் நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. அன்று காலை நடைபெற்ற கரிகால் சோழன் ஊர்வலம், சென்னையில் 1968 ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாநாட்டினை யொட்டி நடைபெற்ற மாபெரும் ஊர்வலத்தினை நினைவூட்டும் வகையிலும், சிலப்பதிகார வரலாற்றுண்மைகளைப் படம் பிடித்துக் காட்டும் வகையிலும் சீரும் சிறப்பும், ஏற்றமும் எழிலும் பெற்று விளங்கிற்று.

**அடிக்கல்நாட்டு விழாக்கள்**

சிலப்பதிகார வரலாற்றை நினைவூட்டும் இலஞ்சி மன்றம், அருகன் கோட்டம், பாவை மன்றம், பௌத்தப் பள்ளி, நெடுங்கல் மன்றம், திருமால் கோட்டம், கொற்றப் பந்தல், முருகன் கோட்டம் ஆகிய வற்றின் கால்கோள் நிகழ்ச்சிக்கு முறையே அமைச்சர்கள் அன்பழகன், என். வி. நடராசன், சத்தியவாணிமுத்து, ப. உ. சண்முகம், சாதிக் பாட்சா, கண்ணப்பன் ஆகியோர் அடிக்கல் நாட்டினர். கொற்றப் பந்தலுக்கு அமைச்சர் ஓ. பி. இராமன் தலைமையில் சிலம்புச் செல்வர் ம. பொ. சியும், முருகக் கோட்டத்திற்கு அமைச்சர் சி. பா. ஆதித்தனர் தலைமையில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் அடிக்கல் நாட்டினர்.

**பிற நிகழ்ச்சிகள்**

அடுத்து அண்ணா விருந்தினர் மாளிகைக்கு, அமைச்சர் மாண்புமிகு இராசாராம் அவர்கள் தலைமையில், முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினர். அன்று பிற்பகல் 4 மணியளவில் புலவர் திரு. கி. வா. சகந்நாதன் அவர்கள் தலைமையில் தமிழர் வரலாற்றுக் கருத் தரங்கம் நடைபெற்றது. மாலை 6 மணியளவில் அமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் சிலப்பதிகாரக் கலைக் கூடத் திறப்பு விழாவும் முதல்வர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டு தலும் நடைபெற்றன. பின்னர் அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நிலாமுற்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முதல்வர் டாக்டர் கலைஞர், அமைச்சர் பேராசிரியர் அன்பழகன், சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், குன்றக்குடி அடிகளார் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இரவு 8 மணியளவில் கவிஞர் கண்ணதாசன் எழுதிய சிலப்பதிகார நாட்டிய நாடகமும், டாக்டர் கலைஞர் கருணாநிதி எழுதிய சிலப்பதிகார நாடகமும் நடைபெற்றன.

**பிற பொதுநலப் பணிகள்**

புதுப்பிக்கப்பட்ட இப் பூம்புகார் நகர்க்கண், இவ் விழாவினையொட்டி அப்பகுதியில் வாழும் மீனவர்கட்குப் பொறியில் இயங்கும் மீன் பிடிக்கும் தோணிகளும், நைலான் வலைகளும் வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது. அத்துடன் அம்மீனவர் வாழும் குடிசைப் பகுதிகளில் குடிசைகளை மாற்றிப் புது இல்லங்கள் அமைத்துத் தருவதெனவும் தமிழக அரசு திட்டமிட்டுள்ளதாக முதல்வர் அறிவித்துள்ளார். சுருங்கச் சொல்லவேண்டுமானால் பூம்புகார் விழா, தமிழகத்தில் சுற்றுலாக் காணவரும் வெளிநாட்டார்க்குக் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் நல்லதொரு திட்டத்தின் கால்கோள் விழாவாக அமைந்துள்ளது எனின் மிகை அன்று.

---

## திருவள்ளுவர் (கலைக்கோயில்) நினைவாலயம்

15 நூறாயிரம் வெண்பொற் காசுகள் செலவில் திருமயிலையில் திருவள்ளுவர் நினைவாலயமொன்று அமைக்கத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் அண்மையில் ஒரு குழு நிறுவப் பட்டது. அக்குழுவின் திட்டப்படி அமையவிருக்கும் இந்த நினைவாலயம் திருவாரூர் தேரைப் போன்ற அமைப்புடைத்தாயும், அனைத்து நாட்டு அறிஞர்கள்கூடித் திருக்குறள் ஆய்வு நிகழ்த்தும் ஆய்வுக்கூடமொன்றினை உடைத்தாயும், பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ள திருக்குறள் நூல்களடங்கிய நூலகமொன்றும், அதனையடுத்துச் சொற்பொழிவு மண்டபமும், திருமண மண்டபமும் கொண்டதாயும் நிறுவப்படும். நினைவாலயத்தின் நடுவே வெண்கலத்தாலாய திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டும் சுற்றுச் சுவர்களில் சலவைக் கற்களில் திருக்குறட் பாக்கள் அனைத்தும் பொறிக்கப்பட்டுமிருக்கும்.

இத் திருக்கோயில் தனிப்பட்ட செல்வர்களின் பொருளுதவி கொண்டும், பரிசுச்சீட்டுகள் மூலம் அரசு திரட்டும் நிதிகொண்டும் நிறுவப்படும் என்று முதல்வர் கலைஞர் கூறினார். அத்துடன், குறள் நெறி பரவவும், கலை வளரவும், அயல்நாட்டார் கண்டு களிக்கும் சுற்றுலாத் தலமாகவும் இந்நினைவாலயம் திகழ ஆவன செய்யப்படும் எனவும் கூறினார். இத் திருவள்ளுவர் நினைவாலயத் திருப்பணித் தொடக்க விழா கல்வி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் 27—4—73 அன்று மயிலையில் நடைபெற்றது. அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் முன்னிலையில் முதல்வர் டாக்டர் கலைஞரவர்கள் இவ்விழாவினைத் தொடங்கி வைத்தார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார், பல்கலைக்கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு, திருவாட்டி டி. என். அனந்தநாயகி, கே. இராசாராம் நாயுடு, முரசொலி மாறன், இராம அரங்கண்ணல், கே. எஸ். நரசிம்மன், ஐ.ஏ.எஸ்., ஆகியோர் உரையாற்றினர்.

---

# கரந்தைத் தமிழ்ச்சங்க மணிவிழா

கரந்தைத் தமிழ்ச்சங்க மணிவிழா ஏப்ரல் திங்கள் 13, 14, 15ஆம் நாட்களில் சீருஞ் சிறப்புமாக நடைபெற்றது.

முதல் நாள், (13—4—73) தமிழக உணவமைச்சர் மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி அவர்கள் தலைமையில், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதியவர்கள், செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்து மணிவிழாத் தொடக்க உரையாற்றினர்.

இரண்டாம் நாள், (14—4—73) கவிஞர் கண்ணதாசன் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. 'ஐவகை நிலம்' என்னும் பொருள்பற்றிக் கவிஞர்கள் முருகுசுந்தரம், தொல்காப்பியன், அப்துல் ரகுமான், டாக்டர் தமிழண்ணல், மா. செல்வராசு ஆகியோர் கவிதை பொழிந்தனர். அடுத்து, தவத்திரு குன்றக்குடி அடிகளார் நடுவராக இருக்கப், "புறநானூற்றில் சிறந்து நிற்பது வீரவுணர்வா, அறவுணர்வா" என்னுந் தலைப்பில், முறையே புலவர்கள் அப்துல்கறீம், அ. அறிவொளி, சோம இளவரசு, காத்தையன் ஆகியோரும், புலவர்கள் நா. பாலுசாமி, ஔவை து. நடராசன், தி. நா. அறிவொளி, பாரதி பித்தன் ஆகியோரும் உறழ்வுரை (சொற்போர்) நிகழ்த்தினர். அன்று பிற்பகலில் முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில், கல்வியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்புரை ஆற்றினர். பேராசிரியர்கள் சாலமன் பாப்பையா, ப. சுந்தரேசன், க. வெள்ளைவாரணனார் ஆகியோர் முறையே கிறித்தவத் தமிழ் இலக்கியங்கள், கானல் வரி, இசைத்தமிழ் வளர்ச்சி என்னும் பொருள்கள் பற்றிப் சொற்பொழிவாற்றினர்.

மூன்றும் நாள், (15—4—73) திரு. அ. ச. ஞானசம்பந்தம், எம்.ஏ., அவர்கள் தலைமையில், தொண்டல் சு. மகாதேவன், எம்.ஏ., பி.எஸ்ஸி., பெருஞ்சித்திரனார், அர. சேஷாசலம், எம்.ஏ., டாக்டர் மோ. இசரயேல் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர். அன்று பிற்பகல் உரை வேந்தர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் புலவர் க. வெள்ளைவாரணனார் அருட்டிரு விபுலானந்த அடிகளின் படத்தினைத் திறந்து வைத்தார். டாக்டர் சொ. சிங்காரவேலன், முதுபெரும் புலவர் ச. தண்டபாணி தேசிகர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம் தொடர்ந்து நற்றமிழ்ப் பணியாற்றி மேலும் பல விழாக்கள் கண்டு சிறந்தோங்க எம்முடைய உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

———

# செய்திகளும் குறிப்புகளும்

## சைவசித்தாந்த உண்மை விளக்கச் சொற்பொழிவுகள்

சென்னை நக்கீரர் கழகத்தார், மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழு என்னும் ஓர் அமைப்பின் மூலம் சில நற்பணிகள் ஆற்றிவருகின்றனர். இக் குழுவின் சார்பில் கடந்த 5—5—73 முதல் 8—5—73 முடிய 3 மௌபரீஸ் சாலை, திரு. வி. க. மணி மண்டபத்தில், தமிழ்த் திரு. கி. இராமலிங்கனார், எம். ஏ., அவர்கள் தலைமையில் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் தொடங்கி வைக்க, மேலையூர் சிவராஜயோக மடத்தின் தலைவர் மறைத்திரு மாணிக்கவாசக ஞான தேசிக சுவாமிகள், முறையே "விஞ்ஞானமும் தெய்வ உண்மையும்" "எது தெய்வ சக்தி" "சமய வாழ்வு வேண்டுமா?" "மனித வரலாறு கூறுவது என்ன" என்னுந் தலைப்புகளில் சைவ சித்தாந்த உண்மைச் சொற்பொழிவுகள் நிகழ்த்திச் சைவ நன்மக்களுக்கு நல்விருந்தளித்தனர்.

## சிவத்திரு ஞானியாரடிகள் நூற்றாண்டு விழா வேண்டுகோள்

திருக்கயிலாய பரம்பரைத் திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப் புலியூர் தவத்திரு ஞானியார் மடாலயத்தில் ஐந்தாம் குருநாதராக எழுந்தருளியிருந்து செந்தமிழும் சிவநெறியும் செழித்தோங்க அருளாட்சி நடத்திவந்த சிவத்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய அடிகளாரின் நூற்றாண்டு விழா, வரும் வைகாசித் திங்கள் 7ஆம் நாள் (20-5-73) ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற விருக்கிறது. இவ் விழாவின் தொடர்பாக மலர் வெளியீடு, கல்லூரித் திறப்பு அறக்கட்டளை அமைத்தல் ஆகியவை நடைபெறவேண்டி யிருப்பதால் அன்பர்கள் தம்மாலியன்ற நல்லுதவிகளை நல்குமாறு, பேராசிரியர் முத்து இராசாக்கண்ணனார் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள நூற்றாண்டு விழாக் குழுவினர் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளனர். நன்கொடை வழங்க விரும்புவோர் ந. கருணானந்தன், செயலாளர், சிவத்திரு ஞானியார் மடாலயம், கடலூர்-2 என்னும் முகவரிக்கு அனுப்புவார்களாக.

# மதிப்புரை

## நெருஞ்சிப்பூ (நாடகம்)

[ஆசிரியர் : புலவர் கோ. விசயராசன், எம்.ஏ., வெளியீடு : கண்ணன் பதிப்பகம், அம்மாபேட்டை, சேலம்-5. விலை : ரூ. 3-75.]

பற்று, பாசம், கலை, சால்பு, அன்பு, உண்மை, உரிமை, நன்றி, நட்பு, கடமை, ஆசை ஆகிய பண்புகளை உள்ளடக்கி உறுப்பினர்களாக நடமாட விட்டு, நல்ல தமிழில் சுவையான நாடகத்தை "நெருஞ்சிப்பூ" வாகத் தருகிறார் இந்நாடக ஆசிரியர். நாடகங்கள் நடித்துச் சுவைப்பனவும், படித்துச் சுவைப்பனவும் என இருவகைப்படும். இந்நாடகம் முந்திய வகையைச் சேர்ந்தது. எனினும் உரையாடல்களின் ஊடே, ஆங்காங்கு ஆங்கிலச் சொற்களைத் தூவி விட்டிருப்பது படிப்போர் நெஞ்சில் நெருஞ்சி முட்களாகத் தைக்கக் கூடியன. தனித்தமிழ்ப் பற்றோடு முயன்றிருந்தால் ஆசிரியர் இம்முறையினைத் தவிர்த்திருக்கலாம். மற்றபடி நாடக அமைப்பு, பதிப்பு முறை ஆகியன நன்றாகவே உள்ளன.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2 140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : வ. சுப்பையா.